பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 30 புதன்கிழமை (15.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 19

## வன்னிப் பிரதேசம் எங்கும் பெரும் வெள்ள அனர்த்தம் மக்கள் இடம்பெயர்வு! போக்கிடம் தெரியாது தவிப்பு

கிளிநொச்சி,டிசெ.15

வன்னியில் விடாது பெய்யும் அடைமழையினால் பல பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். சில பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்ததால் மக்கள் இடம்பெயரமுடியாது சிக்கியுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுவரை 8 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளன. 6 ஆயிரம் வரையான குடும்பங்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. தொடர்ந்து பாதிப்புகள் ஏற்பட்டவண்ணம் உள்ளன. பாதிப்பு விவரங்களைத் திரட்டும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுக் காலை வரை 112.5 மில்லி மீற்றரும் அக்கராயன் பகுதியில் 116.5 மில்லி மீற்றரும் கடந்த மூன்று தினங்களும் இரணைமடுப் பகுதியில் 245.5 மில்லி மீற்றரும் அக்கராயனில் 274.5 மில்லி மீற்றரும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இரணைமடுக் குளத்திற்குத் தொடர்ந்து நிமிடத்திற்கு 12ஆயிரம் கனஅடி நீர் வந்துகொண்டிருப்பதால் அதன் 6 வான் கதவுகள் 3 அடியிலும் 5 வான் கதவுகள் 4 அடியிலும் ஒரு வான் கதவு 2 அடியிலும் திறக்கப்பட்டு வான்பாய விடப்பட்டுள்ளது. இதனால், கிளிநொச்சிக் குளத்திற்கு அதிகளவு நீர் வந்து கொண்டிருப்பதால், வட்டக்கச்சிக்கான போக்குவரத்துப் பாதையில் 3 அடிக்குமேல் வெள்ளம் பாய்கின்றது. வன்னியின் பெரும் பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்வதனால் போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிப்படைந் துள்ளன. ஆறுகள் பெருக்கெடுத்துப் பாய்ந்து ஓடிக்கொண்டி

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணப் பணிகளை ஒருமுகப்படுத்த விசேட செயலணி

கிளிநொச்சி,டிசெ.15

வன்னியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளை ஒருங்கிணைத்து ஒருமுகப்படுத்துவது என்று நேற்றுக் கூட்டப்பட்ட ஓர் அவசரக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களின் உதவிகளை, அவற்றின் அவசியம் மற்றும் முழுப் பயன்பாடு கருதி ஒருங்கிணைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி திட்டமிடல் செயலகத்தில் திட்டமிடல் செயலகத்தின் பணிப்பாளர் மாறன் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் எம்.தியாகராஜா ஆகியோரது தலைமையில் நேற்றுக் கூட்டப்பட்ட அவசரக் கூட்டத்தில் வெள்ள நிலைமை குறித்து விரிவாக ஆராயப் பட்டது. அகதிகளுக்கான ஐ.நா.

(16ஆம் பக்கம் பார்க்க)

# புதுத் தகவல் ஏதும் இன்று புலிகளிடமிருந்து வராது!

## சொல்ஹெய்மின் வன்னி விஜயம் திருப்பம் எதையும் ஏற்படுத்தாது!

கொழும்பு,டிசெம்பர்15

**நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இன்று வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுகின்றார். ஆனால், இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளிடமிருந்து எரிக் சொல்ஹெய்முக்குப் புதிய தகவல் ஏதும் தெரிவிக்கப்படமாட்டாது. சொல்ஹெய்மின் வன்னி விஜயம் புதிய திருப்பம் எதையும் ஏற்படுத்தாது - இப்படி விடயமறிந்த வட்டாரங்கள் அடித்துக்கூறின.**

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான காலக்கெடு எதனையும் இன்றைய சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுக்கக்கூடும் என்று சில செய்தி வட்டாரங்களில் தகவல்கள் கசிந்திருந்தன.

ஆனால், விடயமறிந்த வட்டாரங்கள் அந்தத் தகவலை அடியோடு மறுத்தன. அத்தகைய காலக்கெடு எதையும் இன்றைய சந்திப்பின் போது புலிகள் குறிப்பிடமாட்டார்கள் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், யுத்தமும் இன்றி, அமைதிப் பேச்சுமின்றி ஓர் அரசியல் வெறுமைநிலை இப்படியே தொடரமுடியாது என்ற தமது அதிருப்தி நிலைப்பாட்டை இன்றைய சந்திப்பின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மருத்துவபீட மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தங்கள் சகல கல்விச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தியிருக்கின்றனர்.

இது தொடர்பாக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் விடுத்திருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சை கல்விச் செயற்பாடுகள் (Surgery Professorial Appointments) கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது சம்பந்தமாகப் பல்கலைக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மழையால் பரீட்சையும் பாதிப்பு

கொழும்பு டிசெ.15

கொட்டும் கடும் மழையால் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்திகளுக்கு வேறு ஒரு தினத்தில் குறித்த பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அனுல எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

எனினும், இதுவரை அப்படி ஒரு சம்பவமேனும் தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களில் மழை பெய்துவருகிறது. கிழக்கில் மழை கொட்டுகிறது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிவரை செல்வதற்கு சொல்ஹெய்முக்கு ஹெலி வசதி!

கொழும்பு,டிசெ.15

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச இன்று வன்னி செல்லும் நோர்வே சமாதானக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வதற்கு அரசினால் ஹெலி வசதி செய்து வழங்கப்படவுள்ளது.

### அரசு நேற்றிரவு திடீர் முடிவு

முன்னதாக இரத்மலானையில் இருந்து வவுனியாவரையும் மட்டுமே சொல்ஹெய்முக்கு ஹெலி வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் அங்கிருந்து அவர் தரை வழியாகவே கிளிநொச்சி செல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், நேற்றிரவு அந்த முடிவு மாற்றப்பட்டு, வழமைபோல் இரத்மலானையில் இருந்து கிளிநொச்சிவரை சொல்ஹெய்முக்குக் ஹெலி வசதியை வழங்க அரசு இணங்கியது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தந்தையை அடித்துக்கொன்று சடலத்தைப் புதைத்தார் மகன்!

### தர்மபுரத்தில் பரபரப்பான சம்பவம்

கிளிநொச்சி,டிசெ.15

போதையில் தாயாரைத் துன்புறுத்தி வந்த தந்தையை, அடித்துக் கொன்று புதைத்தார் மகன்.

இந்தப் பரபரப்பூட்டும் சம்பவம் நேற்று கிளிநொச்சி, தர்மபுரம் 10 ஆம் யுனிட் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

முற்பகல் 11 மணியளவில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் முற்றியபோது தந்தையாரை அடித்துக்கொன்ற மகன், சடலத்தை வீட்டு வளவில் புதைத்திருக்கின்றார். சடலம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப் பயிற்சிக்காக இந்தியாவின் இரு கப்பல்கள் கொழும்பு வந்தன

கொழும்பு,டிசெ.15

இலங்கைக் கடற்படைக்கும், இந்தியக் கரையோரக் காவற்படையினருக்குமிடையிலான கூட்டுக் கடற்படைப் பயிற்சி எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கையின் மேற்குக் கடற்பிராந்தியத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்காக இந்தியக் கரையோர ரோந்துக் கப்பல்களான சாரங்கா, துர்க்கா ஆகியன நேற்றுக் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்தியக் கரையோரக் காவற்படையின் கரையோர ரோந்துக் கப்பல்கள் இரண்டுடன் கடல் பிராந்தியக் கண்காணிப்பு விமானமொன்றும், சேட்டக் ரகக் ஹெலிகொப்டரொன்றும் வந்துள்ளன.

இதேவேளை, இலங்கைக் கடற்படை தனது

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மறவன் மாஸ்டரின் வித்துடலுக்கு வடமராட்சியிலும் வன்னியிலும் அஞ்சலி

வடமராட்சி,டிசெ.15

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவைச் சேர்ந்த மூத்த போராளியான லெப்டினன்ட் கேணல் மறவன் மாஸ்டரின் வித்துடலுக்குப் பெருந்திரளான மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு பொலிகண்டி, திக்கம், சக்கோட்டை, இன்பருட்டி, சுப்பர்மடம் ஆகிய வீதிகளூடாக வித்துடலைத் தாங்கிய ஊர்தி எடுத்துச்செல்லப்பட்டு பருத்தித்துறை பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் பொதுச்சுடரை கடற்புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் அன்பழகனும் ஈகச்சுடரினை எட்வினும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மலர் மாலை அணிவித்து வித்துடலுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வின்சன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், வடக்குக் கடற்றொழிலாளர் சங்கங்களின் பொறுப்பாளர் கங்கை அமரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர். தொடர்ந்து 11.45 மணியளவில் வித்துடல் தாங்கிய பேழை ஊர்தியில் புலோலி, மாலி சந்தியூடாக எடுத்துச்செல்லப்பட்டு, நெல்லியடியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மீண்டும் 1.30 மணிக்குக் கொடிகாமம் வழியாக முகமாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கிருந்து மக்கள் அஞ்சலிக்காக முழங்காவில், பூநகரி, வெள்ளாங்குளம், செம்மலை ஆகிய இடங்களிற்கு எடுத்துச்செல்லப்பட்டு வைக்கப்பட்டது.

இன்று முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி ஊடாக மறவன் மாஸ்டரின் வித்துடல் எடுத்துச்செல்லப்பட்டு, தாளையடியிலுள்ள அவரது இல்லத்தில் இறுதிக் கிரியைகளுக்காக வைக்கப்படும்.

நாளை நண்பகல் 12 மணிக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் அனைத்து மரியாதைகளுடனும் வித்துடல் அடக்கம் செய்யப்படவுள்ளது. (ஐ-70-202-173)

## வரலாற்றுப்பாட செயலமர்வு

தென்மராட்சி,டிசெ.15

2005 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 7 வகுப்புகளில் குடியியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான செயலமர்வொன்று இன்று முதல் மூன்று தினங்கள் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவகத்தினரால் நடத்தப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் முதன்மை ஆசிரியர்கள் ஆகியோருக்கே இச்செயலமர்வு நடத்தப்படுகின்றது. (3-203-117)

## முகமாலை விபத்து: சாரதிக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,டிசெ.15

முகமாலையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிக்கி இரு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்றன.

இந்த வழக்கில் - விபத்தில் - சம்பந்தப்பட்ட மினிபஸ் சாரதியான ராஜரட்ணம் மகீசனனை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் -

சட்ட வைத்திய அதிகாரியின் மரண விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் - சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

சம்பவ இடத்தை நீதிவான் இன்று பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4-204-31)

## பால்மா, சமையல்வாயு விலை இவ்வார இறுதியில் அதிகரிக்கும்?

கொழும்பு,டிசெ.15

பால்மா மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளில் இவ்வார இறுதியில் அதிகரிப்பு ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகப் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பால்மா மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படவேண்டுமென்று சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் கடந்த மூன்று மாத காலமாகத் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துவந்தன.

உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதால் பால்மா மற்றும் சமயல் எரிவாயுவின் விலைகளை அதிகரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனங்கள் வலியுறுத்தின.

இதுதொடர்பான இறுதித் தீர்மான மொன்றை எடுப்பதற்காகப் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக் கூட்டம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-க)

### தொடரும் மழையால்

## காரைநகருக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது

காரைநகர்,டிசெ.15

கடந்த இரு நாள்களாகப் பெய்துவரும் கடும் மழையினால் காரைநகருக்கான போக்குவரத்துக்கள் அனைத்தும் முற்றாகத தடைப்பட்டுள்ளன.

காரைநகரில் உள்ள பிரதான மேற்கு வீதி உள்ளிட்ட அனைத்து வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை மக்கள் அனுபவித்து வருகின்றனா.

காரைநகர் மேற்கு வீதி மிக மோசமாகச் சேதமடைந்திருப்பதுடன், மூன்றடிக்கு மேல் வெளம் உயர்ந்திருப்பதால் காரைநகருக்கான போக்குவரத்துகள் அனைத்தும் வலந்தலைச் சந்தியுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த வீதியில் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட எந்தவித வாகனங்களும் செல்லமுடியாது இருப்பதால் பொதுமக்கள் சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரம் வரை வெள்ளத்தில் கால்நடையாகச் செல்லவேண்டியுள்ளது.

நேற்றையதினம் காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் குழந்தைகளுக்கான தடுப்பு மருந்து வழங்கல மற்றும சிகிச்சைக்காக வாகன வசதிகள் ஏதுமின்றி கொட்டும் மழையில் கைக் குழந்தைகளைக் கையில் ஏந்திய வண்ணம் நூற்றுக்கும் மேற்பட்ட தாய்மார்கள் பல கிலோ மீற்றர் தூரம் வெள்ளத்தில் நடந்து வைத்தியசாலைக்குச் சென்றதைக் காணமுடிந்தது.

வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள், க.பொ.தசாதாரண தரம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் வாடகை வாகனங்களைக்கூட அமர்த்திச் செல்லமுடியாது பெரும் சிரமத்தின் மத்தியில் வெள்ளத்தில் நடந்து செல்கின்றனர்.

இவர்களில் பலர் வீதிகளில் உள்ள பாரிய குழிகளுக்குள் வீழ்ந்து காயமடைந்த சம்பவங்களும் காரைநகர் மேற்கு வீதியில் நேற்று பரவலாக இடம்பெற்றன.

வீதி மிகமோசமாகச் சேதமடைந்து போக்குவரத்துக்கள் அனைத்தும் தடைப்பட்டு காரைநகரில் உள்ள பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் உரிய அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருப்பது குறித்துப் பொதுமக்களும் பொது அமைப்புக்களும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (3-73)

## 'கூட்டுறவு நகர்' வர்த்தக வளாகம் நேற்று வைபவ ரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நவீன முறையில் புதிதாக அமைக்கப்பட்ட 'கூட்டுறவு நகர்' நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.ப.நோ.கூ. சங்கத் தலைவர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கூட்டுறவு நகரினை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். முதலாவது விற்பனையை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ்.பள்ளிவாசல் மௌலவி அலாதீன் அஸாதீன், தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த வண.பிதா இராஜகுமார் உட்படப் பலர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து, கூட்டுறவு நகருக்கான பெயர்ப் பலகையை யாழ்.மாவட்ட கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் புஸ்பகுமார் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து கூட்டுறவு நகர் மருந்தகத்தை யாழ்.பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.ஹென்றி, பதிப்பகத்தை கொழும்புத்துறை கிளைத் தலைவர் அருளையா இராசமணி, தொலைத் தொடர்பகத்தினை யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச்சங்கத் தலைவர் க.சிவசுப்பிரமணியமும் கிராமியு வங்கியை யாழ்.ப.நோ.கூ.சங்க இயக்குநர்சபை உறுப்பினர் சபா.தியாகராசா, உணவகத்தினை யாழ்.பல நோ.கூ. சங்கத் தலைவரின் பாரியார் திருமதி சிறில் ஆகியோர் நாடவை வெட்டித் திறந்துவைத்தனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவனேசன், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (3-5-17-30-86-111)

## ஆப்கானிஸ்தான் அமெரிக்கத் தடுப்பு முகாம்களில் கைதிகள் உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்கின்றன

### உலக மனித உரிமை அமைப்பு குற்றச்சாட்டு

நியூயோர்க்,டிசெ.15

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தடுப்பு முகாம்களில் கைதிகள் உயிரிழக்கும் பல புதிய சம்பவங்கள் நடைபெறுவதாக நியூயோர்க்கைத் தளமாகக்கொண்டு இயங்கும் 'ஹியூமன் றைட்ஸ் வொட்ச்' என்ற மனித உரிமைகள் அமைப்பு அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

ஆப்கானிஸ்தான் சிப்பாய் ஒருவர் தவறுதலாகக் கைதுசெய்யப்பட்டு, அமெரிக்க இராணுவத்தினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டார். இதனால பலமான காயங்களுக்கு உள்ளான அவர் உயிரிழந்தார்.

அத்தோடு, அமெரிக்க இராணுவத்தால் சிறை வைக்கப்பட்டுள்ள மேலும் 3 கைதிகள் உயிரிழந்துள்ளனர். இதற்கான ஆதாரங்கள் தம்மிடம இருப்பதாக மேற்படி மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு இச்சம்பவங்கள் தொடர்பான பகிரங்கக் கடிதமொன்றை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட்டுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இவ்விடயம் உட்படப் பல சம்பவங்கள் குறித்து இவ்வமைபபு அக்கடிதத்தின் மூலம் முறைப்பாடு செய்துள்ளது. கைதிகள் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்படுகின்றனர் - நடத்தப்படுகின்றனர் - என்ற குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்படாதது குறித்தும் அக்கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் சிறைச்சாலையில் அமெரிக்க இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதில் உள்ள அமெரிக்காவின் இயலாமை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது என அக்கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்ற சிறைக்கைதிகள் தொடர்பான அறிக்கையை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் பற்றி அமெரிக்கா தெளிவுபடுத்த வேண்டுமென்றும் இந்த மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

திட்டமிடப்படாத கொலைகள் உட்படப் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாகச் சுமார் 30 படையினர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்றும் -

அவர்கள் நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொள்வார்கள் என்றும் - கடந்த ஒக்ரோபர் மாதம் அமெரிக்க இராணுவம் தெரிவித்திருந்தது. ஆனால், இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத தண்டிக்க இதுவரை அமெரிக்க அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறிவிட்டது என்றும் 'ஹியூமன் றைட்ஸ் வொட்ச்' என்ற மனித உரிமைகள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

### உலக அரங்கில்

## சிரியாவில் குண்டுத் தாக்குதல்; பலஸ்தீனியர் மூவர் காயம்!

டமஸ்கஸ்,டிசெ.15

சிரியத் தலைநகர் டமஸ்கஸ்ஸில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் மூன்றுபேர் படுகாயமடைந்தனர்.

இக்குண்டு வெடிப்பை இஸ்ரேல் நடத்தியுள்ளதாகச் சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்கார்க்குண்டு வெடிப்பில் பலஸ்தீனியர் ஒருவரும் அவரது மனைவியும், மகளுமே காயமடைந்தனர். காயமடைந்தவர் ஹமாஸ் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீது சிரியா சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டை அந்நாட்டு அரசு மறுத்துள்ளது. இக்குண்டுவெடிப்புக்குத் தாம் காரணமில்லை என்றும் -

இதுவொரு தீவிரவாதச் செயல் என்றும் - அது தெரிவித்தது.

கடந்த செப்ரெம்பர் மாதமும் இதேபோன்றதொரு கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஹமாஸ் இயக்க அங்கத்தவர் கொல்லப்பட்டார். மேற்படி இரு குண்டுவெடிப்புச் சம்பவங்களுடனும் ஒரே இயக்கமே தொடர்புபட்டிருப்பதாக ஹமாஸ் இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ-க)

## இஸ்ரேல் - பலஸ்தீனக் கூட்டில் உருவாகியது முதல் திரைப்படம்

டுபாய்,டிசெ.15

இஸ்ரேலிய படப்பிடிப்புக் குழுவினருடன் இணைந்து பலஸ்தீன இயக்குநர் ஹன்னா எலியாஸ் தயாரித்த 'தி ஆலிவ் ஹார்வஸ்ட்' என்ற திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

அண்ணனும், தம்பியும் ராய்தா என்ற பெண்ணைக் காதலிப்பதுதான் இத்திரைப்படத்தின் கதை. இதுவெறும் கதையல்ல பலஸ்தீன, இஸ்ரேலிய மக்களிடையே காணப்படும் பிரச்சினைதான் படமாக்கப்பட்டிருக்கிறது என்றும் -

பலஸ்தீனப் பகுதியை யார், எப்படி பங்கீடு செய்துகொ[illegible] என்ற பிரச்சினையே இக்காதல் கதையிலூ[illegible]கச் சொல்லப்படடிருக்கிறது என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலியர்களுடன் - யூதர்களுடன் - எப்படி நீங்கள் இப்படத்தை இயக்கினீர்கள் என ஹன்னா எலியஸிடம் அரபுச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர் - கண்டித்தனர். அதற்கு "யூதர்களும், பலஸ்தீனர்களும் ஒற்றுமையாக இருந்தால் அப்பிரதேசமே சுவர்க்கபுரியாக மாறிவிடும். இதனை வலியுறுத்தியே அவர்களோடு கூட்டுச் சேர்ந்து இப்படத்தை உருவாக்கினேன்" என்றார் எலியஸ். (ஐ-க)



லெப்.கேணல் மறவன் மாஸ்டரின் வித்துடல் மக்கள் அஞ்சலிக்காக பருத்தித்துறை பஸ்நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதையும் பொது மக்கள் அஞ்சலி செலுத்துவதையும் வித்துடல் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:சி.சுந்தரலிங்கம் - கரவெட்டிச் செய்தியாளர்)

# மட்டக்களப்பில் அமைதியைப் பேண வன்செயல்கள் முடிவுக்கு வரவேண்டும்

## 13 சர்வதேச அமைப்புக்கள் சகல தரப்பினரிடம் கோருகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலையான அமைதியைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ள அனைவரும் எல்லா வகையான வன்செயல்களையும் முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் அக்கறை கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மட்டக்களப்பில் பணிபுரியும் 13 தொண்டர் அமைப்புகள் மேற்கண்டவாறு கோரியுள்ளன.

கனடா - ஸ்ரீலங்கா உலக பல்கலைக்கழக சேவை, இசட்.ஓ.ஏ. என்னும் அகதிகள் நலன் அமைப்பு, ரெரோடெஸ் ஹேரம்மஸ், பெரிய பிரித்தானிய ஒக்ஸ்பாம், அறவழி அமைதிப்படை, சர்வதேச கெயர் நிறுவனம், குடும்ப புனர்வாழ்வு நிலையம், இலங்கை கிறிஸ்தவ சிறுவர் நலச் சங்கம், யுனிசெவ், வெளிநாடுகளுக்கு உதவும் ஒக்ஸ்பாம் சமூகம், உலக தரிசனம், கடல் கடந்த நாடுகளின் தொண்டர் சேவை, இலங்கை சிறுவர்களுக்கான நிதியம் ஆகிய அமைப்புகள் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2002 ஆம் ஆண்டில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகியதில் இருந்து ஸ்ரீலங்கா சாதகமான களநிலை மாற்றத்தை அனுபவித்து வருகின்றது. நிவாரணம் என்ற நிலையில் இருந்து புனர்நிர்மாணமும் அபிவிருத்தியும் என்ற நிலையை நோக்கி நகர்வதற்கு ஊக்கம் அளித்திருக்கிறது. ஏறக்குறைய கடந்த இரு தசாப்தங்களாக நிலவிய போரினால் சமூகங்களிடையே மிக ஆழமாக நிலவிய பாதிப்புக்களை நல்லெண்ண அடிப்படையில் அணுகுவதற்கான ஊக்கம் தரும் ஆதரவு உருவாகியுள்ளது. முதலீடு வளர்ச்சி கண்டிருக்கின்றது. குடிபெயர்ந்த மக்கள் தங்கள் வீடுகளிற்குத் திரும்பிவிட்டார்கள். போரினால் தங்களின் ஆதாரங்களைப் பறிகொடுத்த மக்கள் அமைதியான எதிர்காலம் நோக்கிப் பார்க்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

சர்வதேச (உள்ளூர் உட்பட) அரச சாரா அமைப்புகளையும் மனித நேய அபிவிருத்தி நிறுவனங்களையும் சார்ந்த நாங்கள் மீள்குடியமர்த்துகை, சமூக அபிவிருத்தி, உணவு, பாதுகாப்பு, சுகாதாரச்சேவைகள், தொழிற்பயிற்சி, சமூகங்களிடையே நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற முயற்சிகளைச் செய்வதன் வாயிலாக இச்சாதகமான சூழநிலை மாற்றத்தில் பங்களிப்புச் செய்ய விரும்புகின்றோம்.

நிலைபேறான அமைதியை நோக்கிய சாதகமான முன் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், மட்டக்களப்பு காலத்திற்குக் காலம் வன்முறைகளின் அதிகரிப்பை அனுபவித்து வருவதனையும் நாங்கள் ஆழமாக கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது. எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் உட்பட சமூகத்தில் அடிக்கடி இடம்பெற்றுவரும் வன்செயல்கள், சமூகங்களின் வாழ்வினை மிகவும் மோசமாக பாதித்துள்ளதுடன் அபிவிருத்திக்கும் முதலீட்டிற்குமான சாத்தியப்பாட்டையும் கெடுப்பதாக இருக்கிறது. இது பாதுகாப்பற்ற சூழ்நிலையினை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்வதுடன் நிவாரணம், மீள்குடியமர்த்துகை, நல்லிணக்கம் அல்லது அபிவிருத்தி என்பவற்றையும் செயல் முறைப்படுத்தத் தடையாக இருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்கள் தங்கள் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்து இருக்கின்ற இவ்வேளையிலே வன்செயல்கள், அச்சம், அவநம்பிக்கை நிறைந்த இந்நிலையில் அது எவ்வாறு நடைபெற முடியுமெனப் பார்ப்பது கடினமாக இருக்கின்றது. அரச சாரா அமைப்புகள், மனிதநேய நிறுவனங்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பில் நீண்டகால ஈடுபாட்டைக் கொண்டவையாகும். தற்போதைய நிலை குறித்து நாம் மிகவும் அனுதாபப்படுவதுடன் சமூகங்களிலும் அவர்களுடனான எங்கள் வேலைகளிலும் இந்நிலை தொடர்வதற்கு அனுமதித்தால் மேலும் அதிக பாரதூரமான பின்னடைவே ஏற்படும் என்பதை அழுத்திக் கூறுகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலையான அமைதியைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ள அனைவரையும் எல்லா வகையான வன்செயல்களையும் முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் அக்கறை கொள்ளுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். இந்த விடயத்தில் காத்திரமானதும் சாத்தியப்படக் கூடியதுமான மாற்றத்தை உருவாக்கக்கூடிய உங்களது இயலுமையை நாம் அங்கீகரிக்கின்றோம். எல்லா சமூகங்களினதும் நலன் பேணுவதிலும் அபிவிருத்தியிலும் நீங்கள் கொண்டுள்ள ஈடுபாட்டிலும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் - என்றுள்ளது. (3)

### வடக்கு - கிழக்கில் அழிந்துவரும்

# தாவர இனங்களைப் பாதுகாப்பதற்கான ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்படவேண்டும்

## சிட்னி பல்கலைக்கழகப் பேராசிரியர் வலியுறுத்து

*யாழ். பல்கலைக்கழக தாவரவியல்துறை நடத்தும் தாவர இனவிருத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறையில் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றன.*

*பயற்சிப் பட்டறையில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கலும் இந்த நிகழ்வில் இடம்பெறும். யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளுகிறார். இதனையொட்டி இக் குறிப்பு பிரசுரமாகின்றது.*

வடக்கு - கிழக்கில் போர் அனர்த்தங்களினாலும் இயற்கை அழிவுகளாலும் விவசாயத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அழிந்துவரும் தாவர இனங்களின் மூலவுயிருருவைப் பேணிப் பாதுகாப்பதற்கு Germplasm Conservation அவசியமான ஆராய்ச்சிகள் இங்கு உடனே ஆரம்பிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு ஆஸ்திரேலிய மேற்கு சிட்னி பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் ஆ.சி. கந்தராசா யாழ். பல்கலைக்கழகத் தாவரவியல் துறையில் இருவார கால தாவர இனவிருத்தி பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிப்பட்டறை இம்மாதம் முதலாம் திகதி முதல் 16ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகத் தாவரவியல் துறையில் நடைபெற்றுவருகின்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையைத் தாவரவியல் துறைத் தலைவர் திருமதி நி.ரவிமன்னன் ஆரம்பித்துவைத்தார். விவசாய பீடாதிபதி எஸ்.இராஜதுரை மற்றும் விலங்கியல் துறைத் தலைவர் ஜெ.நந்தகுமார் ஆகியோர் இப்பயிற்சிப்பட்டறையில் உரையாற்றினர்.

இதில் ஆசிரியர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், விவசாய போதனாசிரியர்கள், துறைசார் விவசாயிகள், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மற்றும் தாவரவியல் துறை விரிவுரையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் ஆர்வமுடன் கலந்துகொண்டிருந்தனர்

பயிற்சிப் பட்டறையை நடத்த வந்திருக்கும் மேற்கு சிட்னி பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் ஆ.வி.கந்தராசா சர்வதேச ரீதியில் ஏற்கனவே ஆராய்ச்சி உதவிகளைத் தாவர உயிர் தொழில்நுட்பத் துறையில் இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், கென்யா, தன்சானியா, உகண்டா, எதியோப்பியா போன்ற நாடுகளில் நடத்தியுள்ளார். இவர் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் தாவர உயிர் தொழில்நுட்பத் துறையில் சிறப்பாகத் தாவர இழையவளர்ப்பு கற்பித்தல், ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளவர். இவர் தாவர இழைய வளர்ப்பு மற்றும் துறைசார் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டதன் விளைவாகப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

மரக்கறிவகை, பழமரங்களின் இழைய வளர்ப்பு ஆராய்ச்சிகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறார். அவாக்காடோ, அன்னோனா, லிட்சி, கக்குமிஸ், கத்தரி, உருளைக்கிழங்கு போன்ற தாவரங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இப்பொழுது நடைபெறும் தாவர இனவிருத்திப் பயிற்சிப் பட்டறை 3 அடிப்படைப் பகுதிகளை உள்ளடக்குகின்றது.

1. தாவர இனவிருத்தி
   வழமையின முறை
   இழைய வளர்ப்பு முறை
2. தாவர முதலுருவ வளர்ப்பு (Protoplast fusion and plant improvement)
3. தாவர மூலவுயிருரு பாதுகாத்தல் - Cryopreservation (Germplasm Conservation of plants)

### வடக்கு - கிழக்கில் பொருத்தமான கால நிலை

பழமரங்களின் பயிர்ச்செய்கைக்கு இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகள் மிகவும் பொருத்தமான காலநிலையைக் கொண்டிருக்கின்றன. கூடிய விளைச்சலுடன் சுவையும் கூடிய பழங்களைத் தருகின்றன. இங்கு மா, பலா, வாழை, பப்பாசி, அன்னாசி, முந்திரிகை போன்றவற்றைப் பயிர்ச்செய்கையாக மேற்கொண்டால் அது பொருளாதார ரீதியில் நல்ல முன்னேற்றகரமான தொழிலாக அமையும். இது உள்ளூர் விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைத் தரக்கூடியது. ஆனால், இதற்கு பெருமளவில் ஒரே மாதிரியான இளம் தாவர நாற்றுக்கள் தேவை. இழைய வளர்ப்பே இதனைப் பெரும் எண்ணிக்கையில் விருத்திசெய்யச் சிறந்த முறையாகும்.

இது உள்ளூர் பயிர்ச்செய்கையாளரின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவது மட்டுமல்லாது அவர்களுக்குத் தாவர இனவிருத்தியையும் தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்தும். சிறப்பாக அண்மைக்காலப் போரினால் பெரிதும் பாதிப்புற்ற வடக்கு - கிழக்குப் பெண்களுக்கு இந்தத் தாவர இனவிருத்தித் தொழிலைக் (குடிசைக் கைத்தொழிலாக) கற்றுக்கொடுத்தால் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி இரவீந்திரநாதன் கிழக்குப் பிரதேசத்தில் புதிதாக உருவாக்கிய பயிர்ச்செய்கை நிலங்களின் அவசியத்தை வலியுறுத்தி இணைப்பேராசிரியர் ஆ.சி.கந்தராசாவிடம் இந்தப் பயிற்சிப் பட்டறையை வடக்கு - கிழக்கு மக்கள் பயனடையக் கூடியவாறு நடத்தவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பயிற்சியின் முடிவில் நாளை 16ஆம் திகதி மாலை சான்றிதழ் வழங்கும் வைபவம் நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள். (ப-8)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo - 06.
Tel:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road,
Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு
Branch
No. 295, Jampettah Street,
Colombo-13 Tel.:2430782 Fax:2430782

நத்தார் நற்சிந்தனை
"நீதி வெள்ளமெனப் பொங்கி வருக!
நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக."
ஆமோஸ் 5:24
அல்பா மிக்ஸ்ஷர்
உடுவில் றோட், மானிப்பாய். தொ.பே: 021 222 2887
கிளைகள் : பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.
: சங்கானை.
மேலதிக விபரங்களுக்கு : 0777 725582

யாழ். குடா நாட்டு பாதணிப் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி!

# முதன்முதலாக யாழ்நகரில்

# DSI SUPERSPORT

# காட்சி அறை




(C/39605)



பாடசாலை மாணவர்களுக்கும்
நவநாகரிக நங்கையர்களுக்கும் ஏற்ற
பாதணித் தெரிவுகளுக்கு
உடனே விரையுங்கள்

**DSI**

காட்சி அறைக்கு!

## சுப்ப சூஸ்

இல.426, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6809

# உதயன்

## ஜனாதிபதிக்கு வந்த நியாயமான சந்தேகம்!

'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்று கூறிய தாம்'- இப்படி ஒரு முதுமொழி உண்டு.

கடந்த ஞாயிறன்று மாத்தறையில் நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில், ஐக்கிய தேசியக் கட்சியினரைப் பார்த்து, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க கூறிய கருத்துக்களைக் கேட்டபோது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வந்தது.

"குழப்பம், அமளிதுமளி இடம்பெறும் கூடமாக நாடாளுமன்றத்தை மாற்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் முயற்சிக்கின்றனர். தமது கட்சிக்காரரான மகேஸ்வரனைக் கொண்டு செங்கோலை அபகரிக்கும் நிலைக்கு வந்துள்ளது ஐ.தே.கட்சி. எப்போதும் அடாவடித்தனத்தை மேற்கொள்ளும் அக்கட்சிக்கு இவை எல்லாம் கைவந்த கலையாகும்.

"நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி நடத்தும் அட்டகாசங்களை அவர்களது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் கட்டுப்படுத்த முடியாமல் போனால் அவர்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்று எமக்குத் தெரியும்"- இப்படி ஜனாதிபதி குமாரதுங்க தமதுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏதோ தமது கட்சியின் பக்கம் சாந்தசொரூபிகளே எம்.பிக்களாகி நாடாளுமன்றம் சென்றிருக்கின்றார்கள் என்பது போலவும், ஐ.தே.கட்சி தரப்பில்தான் தாதாக்கள் எம்.பிக்களாகியிருக்கின்றனர் என்ற மாதிரியும் உரைத்திருக்கின்றார் ஜனாதிபதி.

ஒரு பிரதி அமைச்சரே செங்கோலைத் தூக்கிக் கொண்டு சபையை விட்டு ஓடி, ஒளித்து வைத்த கூத்தும் -

எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்ய வந்த வணக்கத்துக்குரிய பிக்கு ஒருவரைப் புரட்டி எடுத்த அநாகரிகமும் -

ஜனாதிபதி தரப்பைச் சேர்ந்த சாந்த சொரூபிகளின் கைங்கரியம் என்பதை மறந்துவிட்டு அவர் பேசுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

ஏதோ தனி ஒருவராக ஐ.தே.கட்சியின் எம்.பியான மகேஸ்வரன் மட்டுமே செங்கோலைத் தூக்கிக் கொண்டு ஓடினார் என்பது போல மிரட்டல் போக்கில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் இந்த நாட்டின் தலைவி.

நாடாளுமன்றத்துக்குள் அநாகரிகமாக நடந்து கொண்ட அவரது அணியினரின் செயல்களை எல்லாம் மறந்துவிட்டு, நாகரிகமான முறையில் தமது எதிர்ப்பை சபைக்குள் காட்டிய தமிழ் எம்.பிக்களுக்கு எதிராக மட்டும் அவரது கூட்டமைப்பு அரசு, நாடாளுமன்ற ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் விசாரணை என்ற பெயரில் புதுக்கயிறு விடவும் தொடங்கியிருக்கின்றது.

தமிழர்களைப் பொறுத்தவரை இவ்விடயங்கள் எல்லாம் அவர்களுக்குப் பொருட்டல்ல.

அமைதி முயற்சிகள் - சமாதானப் பேச்சுகள் - வாயிலாக இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வு ஒன்றைத் தருவதற்கு பௌத்த, சிங்கள மேலாண்மை வாதப் போக்குடைய இந்த அரசு தயார் இல்லை என்பது தமிழர் தரப்புக்கு நன்கு தெரியும். அதனால்தான் நமது சுதந்திர விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர எமக்கு வேறுவழி ஏதும் இல்லை என்று கடந்த மாவீரர் தின உரையில் தமிழர்களின் தலைவர் வே.பிரபாகரன் கூறியிருந்தார்.

இலங்கைத் தீவின் நாடாளுமன்றத்தில் ஈழத் தமிழர்கள் தங்களின் கருத்தையும், எதிர்ப்பையும் நியாயமான முறையில் வெளிப்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுமானால் - நாடாளுமன்ற மேடையைத் தங்களின் நியாயங்களை வெளிப்படுத்தும் ஒரு களமாகப் பயன்படுத்தும் வாய்ப்பு தமிழர்களுக்கு இல்லாமல் போகும்.

அது சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்ற நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தும்.

இதைச் சிங்கள அரசுத் தரப்பு உணர்ந்திருப்பது நல்லது.

"உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றத்தினால் மாற்றலாம் என ஜி.எல். பீரிஸ் என்ற பேராசிரியர் கூறியிருக்கின்றார். அவர் உண்மையில் பேராசிரியரா என்பதை விசாரணை நடத்தி அறியுமாறு நான் சி.ஐ.டி.யினரைக் கேட்டிருக்கிறேன்" - என்றும் இந்த நாட்டின் அதி உத்தம ஜனாதிபதி அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

நல்லது. இலங்கைத் தீவின் அரசமைப்பு என்பதே அதன் ஜனாதிபதிக்குத் தெரியாது போலும்.

அரசமைப்பின் முதலாவது அத்தியாயமே மக்களின் இறைமை பற்றிப் பேசுகின்றது.

அதன்படி மக்களின் நீதித்துறைத் தத்துவம் நீதிமன்றங்கள் ஊடாக நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படும் என்பது தெட்டத் தெளிவு.

அதைக் கூடப் புரிந்துகொள்ளாமல் பேராசிரியர் பீரிஸ் போன்றோரின் கல்வித் தகைமை குறித்து புலனாய்வு விசாரணை நடத்த நினைக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

படித்துச் சித்திபெறாமலேயே பட்டங்களைப் பெற்றுக் கொள்ளும் பக்குவம் குறித்து நன்கு தெரிந்தவராதலினால்தான் இந்தச் சந்தேகம் அவருக்கு வந்திருக்கிறது என்பது புரியக்கூடிய ஒன்றே.

# ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை வழங்காவிட்டால் கல்வி அலுவலகங்களின் முன்னால் மறியல் போர்

## தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுக்கிறது

அச்சுவேலி.டிசெ.15

வடக்கு - கிழக்கில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருந்து வரும் சம்பள உயர்ச்சி, வாழ்க்கைச் செலவுப்படி, சம்பளப்பாக்கி என்பவற்றை வழங்கத்தவறினால் ஜனவரி 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகங்களின் முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சிற்கு முன்னறிவித்தலுடன் கூடிய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

ஏனைய மாகாணக் கல்வி அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கான பல கொடுப்பனவுகள் வடக்கு - கிழக்கில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாமல் இருந்து வருவதை எடுத்துக்காட்டி வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு ஆசிரியர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

பயிலுநர் ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்படாமல் இருப்பது அவர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுப்படிகள் வழங்கப்படாமல் இருப்பது ஆசிரியர்களுக்கு வழங்குவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பள நிலுவைகளை வழங்காமல் இருப்பது என்பனவற்றை சுட்டிக்காட்டி அவற்றை அடுத்த வருடம் ஜனவரி மாதச் சம்பளத்துடன் வழங்கவேண்டும் எனவும், அவ்வாறு வழங்கத்தவறினால் ஆசிரியர்களின் சம்பளத்தினமான 20 ஆம் திகதிக்கு அடுத்தநாள் வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து வலயக்கல்வி அலுவலகங்களின் முன்பாகவும் மறியல் போராட்டம் நடத்தப்போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இந்தக் கடிதத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் , மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளனர். (8-11)

### ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்

## தமிழ் மொழியில் சித்தியடையாதோருக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனம் இல்லை

அச்சுவேலி.டிசெ.15

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தமிழ் மொழிப் பாடத்தில் சித்தியடையாதவர்களுக்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர் பதவி நியமனம் வழங்கப்படமாட்டாது.

வடக்கு - கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அடுத்த வருட ஆரம்பத்தில் 1,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதில் கணிசமான தொகையினர் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்.

போட்டிப்பரீட்சையில் உயர் புள்ளி பெற்றவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சைகள் நியமிக்கப்படவிருக்கும் பாடங்கள் ரீதியாக நடைபெற்றன.

ஆரம்பக் கல்வி ஆசிரியர் பதவிக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் கணிசமான தொகையினர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தமிழ் மொழிப் பாடத்திற்கு தோற்றாதவர்களும் சித்தியடையாதவர்களும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

'ஆரம்பக் கல்வி ஆசிரியர் பதவி தகைமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் ஜி.சீ.ஈ. உயர்தர அடிப்படை பாடத்தகைமை பற்றி குறிப்பிடப்பட்ட விளக்கத்தை கருத்தில் கொள்ளாமல் பெரும்பாலானவர்கள் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்திருப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது' என கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (8-11)

## வடைக்குள் கம்பி ஆணி; நீதிமன்றத்தில் வழக்கு!

வலி.தென்மேற்கு.டிசெ.15

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பரிமாறப்பட்ட வடை ஒன்றுக்குள் கம்பி ஆணி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அந்த வடையை வழங்கிய உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி அலுவலகத்தில் பயிற்சி வகுப்பொன்றில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்குவதற்கென யாழ். நகரில் உள்ள உணவகம் ஒன்றிலிருந்து வடைகள் எடுத்துவரப்பட்டன. அவற்றில் ஒரு வடைக்குள் கம்பி ஆணி இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்த வடையை வழங்கிய உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வடையும் கம்பி ஆணியும் வழக்கின் தடயப் பொருள்களாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (8-135)

## பிரதேச சபை உறுப்பினர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு.டிசெ.15

நாடெங்கிலுமுள்ள பிரதேசபை உறுப்பினர்கள் கொழும்பில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று நடத்துகின்றனர்.

இதுவரை காலமும் பிரதேசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியை, தொடர்ந்து வழங்கவேண்டும் எனக் கோரியே பிரதேசபை உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர்.

இன்று காலை 10.30 மணிக்கு கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு, கிராமிய மட்டத்தில் இருந்தே அபிவிருத்தியை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது என்று கூறுகின்றது.

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்கே கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தம்பட்டம் அடிக்கின்றது.

இதுவரை காலமும் பிரதேசபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியின் மூலமே கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

ஆனால், புதிய வரவு - செலவுத் திட்டத்தின்படி பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. நாட்டில் பெரும்பாலான பிரதேச சபைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இதன் காரணமாகவே பிரதேசசபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இது ஓர் அரசியல் பழிவாங்கல் என்பது தெளிவாகின்றது என ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே, பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிதி ஒதுக்கீடுகளைத் தொடர்ந்தும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் இன்று அடையாள ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர். (க-8)

## முனீஸ்வரன் வீதியில் துர்நாற்றம்

யாழ். முனீஸ்வரன் வீதியில் இருந்து பொலீஸ் நிலையத்திற்குச் செல்லும் வீதியோரத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இப்பகுதியில் கொட்டப்படும் கழிவுகள் கடந்த சில நாள்களாக மாநகர சபையினரால் அகற்றப்படாமையே இத்துர்நாற்றம் வீசுவதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (3 -203 -17)

### உதாவாக்கு

வாழ்வில் உண்மையான சந்தோசம் நேசிக்கப்படுவதிலும், நேசிப்பிலுமே இருக்கிறது.

### நாளை

மார்கழி 01
வியாழக்கிழமை
(16.12.2004)
திதி: பஞ்சமி
முன்னிரவு 08.21
நட்சத்திரம் : அவிட்டம்
பின்னிரவு 06.13
சுபநேரம்: 07.52 - 9.22
ராகுகாலம்: 01.57 - 3.22
(பழையநேரப்படி)

## தமிழ்த்தாயின் அன்பு மைந்தா! சொக்கலிங்கா!!

மதுரையிலே வந்தமர்ந்த மகாதேவ சொக்கலிங்கம்
முதியதமிழ் முச்சங்கம் முன்னின்று வரம்புரைத்துப்
பூவுலக மெங்கும் பொன்மொழியாய்த் தமிழ் மொழியை
தேவர்கள் போற்றும் சிறப்படையச் செய்து வைத்தார்.
கண்ணியம்சேர் நாயன்மார் கட்டினிலே தெய்வீகத்
திண்ணமிகு கந்தையாச் செட்டிமக னாய்வந்த
சொக்கனெனும் பேர் படைத்த சொக்கலிங்கம் பேராளன்
திக்கெல்லாம் மனம் சிதற தேவுலகம் சென்று விட்டாய்
என்பதனைக் கேள்வியுற்றேன். இதயம் குமுறிநின்றேன்.
மன்பதைகள் எல்லாம் மண்ணை விட்டு விண்போதல்
வழக்கமேயா யிழனும் மனிதருக்குள் தெய்வத்தை
இழப்பதுவே பெருங்கவலை இலக்கியத்தில், இலக்கணத்தில்
கவித்துவத்தில் காவியத்தில் கருதுமறை ஆகமத்தில்
தவத்துறைசேர் சைவநெறித் தத்துவத்தில் முச்சங்கப்
பத்துப்பாட் டெட்டுத்தொகை, பழமை பெறு நூல் எல்லாம்
சித்தமதில் வைத்துணர்ந்து சிறந்த பல கவி நூல்கள்
புத்தகத்தால் சிறுவருக்குப் புத்திசொல்லும் சைவநெறி
எத்தனையோ கட்டுரைகள் இனிய கலை நாடகங்கள்
பேரறிஞர் மேடைகளில் பேச்சுக்கள் கவியரங்கம்
ஆரமுத மாகவே அள்ளியள்ளித் தந்த செம்மல்
வானொலியில், பேரான பத்திரிகைகள் யாவற்றிலும்
தேனெனவே தந்து திகழ்ந்த - சொக்கலிங்கம்
மறைந்தாலும் மறையாது வாழ்கின்றார் தமிழ் வடிவில்
இலக்கியத்தில் இலக்கணத்தில் எமக்கிரும் சந்தேகக்
கலக்கமதைக் கேட்டுணரக் கல்வி மானில்லை எனத்
தவிக்கின்றோம் சொக்கலிங்கா, தமிழ்த்தாயின் அன்பு மைந்தா
சிவச்சுடராய்ச் சொக்கலிங்கம் சேவடிக்கீழ் வாழிய நீ.

- அருட்கவி சீ.விநாசித்தம்பி

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில் மணிக்கூட்டுக் கோபுர வீதியில், 6 பரப்புக்காணியும் 4½ பரப்புக் காணித்துண்டும் உடன விற்பனைக்குண்டு. தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம்,144/2 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (39670)

மீசாலை மேற்கு, ஊரெல்லை வீதியிலுள்ள 13¼ பரப்பு "கந்தகாடு" என்னும் காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை). தொடர்பு: திருமதி ந.சுமி, T.P.No: 077 6042136, 077 3024306. (39668)

**Temple Road** இல் கைலாசப் பிள்ளையார் கோயிலுக்குத் தெற்குப் பக்கமாக கிழகசே செல்லும் முதலாவது ஒழுங்கையிலுள்ள மூன்றாவது காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு 1½. தொடர்பு: செ.தெய்வசீலன், C/o சிவபாலன, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (39673)

## காணி, வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, மானிப்பாயில் எச்சாட்டி வைரவர் கோயிலுக்குப் பக்கத்தில் நிறைந்த பயன் தரு மரங்களுடன் 4அறைகளுடன் கூடிய வீடுடைய 8 பரப்புக் காணி உடனே விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆசீர்வாதம் இம்மனுவேல் மேரி யோசப், சுதுமலை தெற்கு, மானிப்பாய். T.P.:0777 163169. (39623)

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் 3பரப்புக் காணியில் வீடும், பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கையில் 3½ பரப்புக் காணியில் வீடும், நாவலர் வீதியில் 2½ பரப்புக் காணியில் வீடும், யாழ்.இந்து மகளிர் ஒழுங்கையில் ஒரு பரப்பு 2 குழியில் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம், 144/2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (39669)

## கடைத் தொகுதி விற்பனைக்கு

அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாய் என்னும் விலாசத்திலுள்ள மூன்று கடைகள் கொண்ட கடைத்தொகுதி கிணறு, மலசலகூட வசதியுடன் உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்பு: க.ரூபன், T.P. No: 077 3024306, 077 6042136. (39667)

## வாடகைக்கு

மீசாலை வடக்கு "சியாமளா மில்" வீதியிலுள்ள சகல வசதிகளுடனான வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: திருமதி ந.சுமி, T.P.No: 077 3024306, 077 6042136. (39666)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, இருமுறை தடுப்பு மருந்தூட்டப்பட்ட **Prima Original Broiler** குஞ்சுகள், பேடுக் குஞ்சுகள் 20.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பரு.நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39386)

## அமெரிக்க விசா

55,000 அமெிக்க விசா (Green Card) லொத்தர் விண்ணப்பிக்க முடிவு திகதி நெருங்கிவிட்டது. தாமதத்தைத் தவிர்க்க விண்ணப்பதாரர் மனைவி, பிள்ளைகள், சகலரதும் முழுப்பெயர்கள், பிறந்தநாள்கள், விலாசத்தையும் எழுதி, சகலரதும் 2"x2" போட்டோக்களுடனும் ரூபா 300/= மணியோடருடன் அனுப்பவும். தொடர்பு: **PENGUIN BOOK SHOP, B2F23, Bloemendhal Flats, Hotahena. T.P.: 077 3081764.** (C/39559)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 31 வயது, மிருகசீரிடம், 12இல் செவ்வாயுள்ள, கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு படித்த, அழகிய, உயரமான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்பு, படம் முதலியவற்றுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2454, மே/பா உதயன். (39627)

## இடம் மாற்றம்

இல. 361, கோயில் வீதியில் இயங்கிவந்த

**கமலக்கண்ணன் திருமணசேவை**

இன்று (15.12.2004) புதன்கிழமைமுதல் இல. 286,நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் இராசாவின் தோட்டச் சந்திக்கும் இடையில்) யாழ்ப்பாணம என்ற முகவரியில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். (39662) (42-13-45)

## அட்வான்ஸ்ட் அம்பிசஸ் அக்கடமி

ஓடக்கரை வீதி - சங்கானை

**புதிய கல்வியாண்டு 2005**

- தரம் 01 - G.C.E.(O/L) வரை சகல வகுப்புக்களும்
- தரம் 05 விசேட புலமைப்பரிசில் வகுப்புக்களும்
- G.C.E.(A.L) வரை விசேட ஆங்கில வகுப்புக்களும்
- SPOKEN ENGLISH வகுப்புக்களும்

குதூகல ஆரம்பம் இன்று புதன் காலை 9 மணி (SLT)

(42-13-45)(39658)

## அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் பொதுச்சந்தை

செம்பியன்பற்று,டிசெ.15

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பொதுச்சந்தை அடிப்படை வசதிகள் எதுவும் அற்றநிலையில் காணப்படுகின்றது.

போர்க்காலச் சூழ்நிலையின் போது சேதமடைந்திருந்த இப் பொதுச் சந்தை தற்போது தற்காலிக கொட்டகைகளிலேயே இயங்கி வருகின்றது. அச்சந்தையைச் சுற்றி வேலிகள் எதுவும் இல்லாமையால் இரவு நேரங்களில் கால்நடைகள் தங்குமிடமாக மாறியுள்ளது. இதனால் காலையில் சந்தைப் பகுதி துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் வியாபாரிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும், எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து இப்பொதுச் சந்தையைப் பாதுகாக்குமாறும் அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (3-203-36)

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்

*திருமதி தனராணி புஸ்பராசா* அவர்களின் அன்புத் தந்தையார்

**ப.தம்பிமுத்து**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து மறைந்த அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

**யாழ்.தாதிய உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.**

(39660)(12-42-13-45)

## குருத்துவ பொன்விழாக்காணும் திருமலை–மட்டுநகர் ஒய்வுபெற்ற ஆயர்

**07-12-1954**

**07-12-2004**



பேரருட்திரு.

L.R.அன்ரனி

ஆண்டகை


அவர்கள் நீடிய சுகம் பெற்று நற்பணி ஆற்ற வாழ்த்துகின்றோம்.

அகஸ்ரின், கருணாவதி, சுரேஷ், றஜிதா, லெஸ்லி.சியாமா

7,4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(39664)(12-42-13-45)

# வீரவணக்கம்



## கடற்புலி லெப். கேணல்

# மறவன் மாஸ்ரர்

*தேசத்தின் விடியலுக்காய்*
*தானைத் தலைவனின் பாதை தொடர்ந்தவனே*
*எங்களின் கடலிலே சிங்களப்படகினை*
*செங்களமாடும் கடல் வேங்கை அணி சேர்ந்தவனே*
*உன் பதினெட்டு வருட விடுதலை வேள்வி*
*எம் தேசத்தின் விடிவுக்கு என்றும் வழி காட்டும்*
*அறுபத்தெட்டு அகவையில் நீ ஆகுதியாகி*
*வீரத்தின் வித்தாக எம் மண்ணில் விதைக்கப்படுகின்றாய்.*
*உன் இலட்சியக்கனவுகள் நனவாகிப் போகும் நாள்கள் வெகுதூரமில்லை*

**வடமராட்சி கிழக்கு, புனர்வாழ்வு -புனரமைப்பு நிறுவனம்.**

(39665)

# குருத்துவ பொன்விழாக் காணும் முன்னாள் ஆயர் அன்ரனி ஆண்டகை

திருமலை - மட்டுநகர் முன்னாள் ஆயர் அன்ரனி ஆண்டகை இன்று புதன்கிழமை தமது குருத்துவத்தில் பொன்விழாவைக் காண்கிறார். திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் இன்று நடைபெறவுள்ள இவரது பொன்விழாத் திருப்பலியை இலங்கையில் தமிழ் ஆயர்கள் இணைந்து ஒப்புக்கொடுப்பர். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

**எல்.**ஆர். அன்ரனி ஆண்டகை எனப் பரிவுடன் அழைக்கப்படும் பெயருக்குரியவர் இலங்கையில் தமிழ்ப் பிரதேச மக்கள் அனைவருக்கும் நன்கு பரிச்சயமானவர். அன்றியும் மற்றப் பிரதேசங்களிலும் இன்னும் மேலாக உரோமா புரியிலும் நன்மதிப்புப் பெற்ற பெருந்தகையாளர்.

தாயின் உதரத்திலேயே இறைவன் இவரைத் தனது பணிக்காகவே தெரிந்து அதாவது, சிலுவையின் பாதையிலே தான் வெற்றியெனும் பேருண்மையை மக்களுக்கு வெளிப்படுத்தச் சித்தமானார் என்பதை இவரின் வாழ்க்கை வரலாறு துல்லியமாக எடுத்துக்காட்டி நிற்கிறது.



குருக்களின் விளைநிலம் எனப் போற்றப்படும் கரம்பொன் என்னும் பொற்பதியில் 1927 ஆம் ஆண்டு உத்தம கத்தோலிக்கக் குடும்பத்தில் நான்கு பிள்ளைகளில் கடைசிப் புதல்வனாகப் பிறந்த இவர், தன் பூலோகத் தந்தையின் முகத்தைக்கூட உற்றுப்பார்க்க முடியாத நிலையில் 53ஆம் நாள் தந்தையை இழந்தார்.

இவரது அன்னையார் இந்த இக்கட்டான நிலையிலும் தமது பாரம்பரிய ஆலயப் பணியைச் சற்றேனும் தவறாது புரிந்து வந்தமை எமது ஆயருக்கு ஓர் அடித்தளமாக அமைந்தது என்றே கூறலாம்.

கல்விச் சேவையை முக்கிய பணியாகக் கொண்ட திருக்குடும்பக் கன்னியர்கள் நடத்திய பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், புனித அந்தோனியார் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் தொடர்ந்த அவருக்குப் புனித மாட்டினார் குருமடத்தில் சேரவேண்டும் என்னும் ஆவல் உந்த அங்கு சேர்ந்து புனித பதிரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும் மிகத்திறமையுடன் நிறைவுசெய்தார். தொடர்ந்து குருநிலைப் பயிற்சிக்காகக் கொழும்பு புனித பேனாட் குருமடத்திலும். பின்னர் உரோமா புரியிலும் கல்வியைத் தொடர அனுப்பப்பட்டார்.

உரோமபுரியில் 1954ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7ஆம் திகதி குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டு யாழ்நகர் திரும்பிய இவர், நல்லூர், நாரந்தனை, யாழ். பேராலயம் ஆகிய பங்குகளில் பணியாற்றி நல்ல 'மேய்ப்பன்' என்ற பெயருக்குரியவரானார். அவரது பக்தியும் பணியார்வமும் நன்கறிந்த அவ்வமயம் திருமலை ஆயராகவிருந்த "கிளெனி" ஆண்டகை தமது செயலாளராக அவரது சேவையையும் சிலவருடங்கள் பெற்றுக்கொண்டார். 1962இல் மீண்டும் யாழ்நகர் வந்தபோது, தமது உளச்சார்புக்கு இணைந்த தோலகட்டி ஆச்சிரம வாழ்க்கையின் சிரேஷ்டராகச் செயற்பட்டு அதிவண. தோமஸ் அடிகளாரின் பணியை அதே பின்னணியில் தொடர்ந்தார். அங்கு அவரது வாழ்க்கை, கிறிஸ்தவம் எவ்வாறு வாழவும் துறவறம் எவ்வாறு வாழப்படவும் வேண்டும் என்பதில் அவர் கொண்ட பற்றார்வம் வெளிப் படையானது.

இவர் மக்களில் தானும் ஒருவனாக மக்கள் குருவாக தம்மைத் தாழ்த்தி அதே வேளை, மக்களில் மாணிக்கமாகத் திகழ்ந்தது தமது நாவன்மையால் அல்ல, இறைமகன் யேசு போனறு இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உடையவராய் வாழ்ந்த, வாழ்ந்துகொண்டே வரும் வாழ்க்கையால் எனின் சாலப் பொருந்தும்.

இவற்றின் பேறாக 1968 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ஆம் திகதி ஆயர் பதவிக்கு உயர்த்தப்பட்டு யாழ். மாவட்ட துணை ஆயராகவும் நியமனம் பெற்று "பரம அன்பில் உண்மையோடு ஊழியம் புரிய" என்னும் விருதுவாக்கைத் தாங்கிச் சேவையைத் தொடங்கினார்.

பினனர் 1974 இல் திருமலை - மட்டுநகர் ஆயர் பதவியை ஆயர் இக்னேஷியஸ் கிளெனியைத் தொடர்ந்து இவர் வகித்து வந்தார். தனது காலத்தில் இவர்பட்ட அ[illegible]வங்கள் பல. இயேசுவின் பாணியில் சிலு[illegible]வையைத் தாங்கியவராகவே வாழ்ந்தார் எனலாம். இயற்கை அனர்த்தம் மட்டு. மாவட்டத்தை அல்லோலகல்லோலப்படுத்தியபோது இவர் மக்கள் ஒவ்வொருவரையும் இனமதபேதமின்றித் தரிசித்து ஆறுதல் கூறி வேண்டிய உதவிகளைச் செய்துவந்தமை மக்கள் இவரில் கிறிஸ்துவைக் காணக்கூடியதாக இருந்தது. இதனால் தான் என்னவோ மக்கள் இவரை, இவர் ஆயர் அல்ல - அதிகாரம் புரியும் மேய்ப்பன் அல்ல - உண்மையான ஊழியம் புரியும் குரு என அழைத்தனர்.

உடல் நலம் குன்றினாலும் உளநலம் மிக்கவராக ஆன்மீகக்கடமைகளில் பணிபுரியும் இவர் தொடர்ந்தும் உதாரண குருவாக வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

**அ.அகஸ்ரின்**

---

# சூறாவளிப் பிரசாரத்துக்கு தயாராகின்றது ஐ.தே.க.!

நாட்டில் அதிகரித்துவரும் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்தும், உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தியும் நாடு முழுவதிலும் சூறாவளிப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனவரி மாதம் நடுப்பகுதியிலிருந்து பிரசார நடவடிக்கையில் ஈடுபட ஐ.தே.கவின் தலைமைப்பீடம் தீர்மானித்திருப்பதாக அக்கட்சியின் பிரதிச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் பிரசார நடவடிக்கை கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரசார நடவடிக்கையின்போது, ரணில் விக்கிரமசிங்கவே ஐ.தே.கவின் ஜனாபதிபதி வேட்பாளர் என்பதையும் அவருக்கு ஈடான அரசியல் முயற்சியுடைய மற்றும் சர்வதேச நாடுகளை ஈர்க்கக்கூடிய ஒரு ஜனாதிபதி வேட்பாளர் எந்தக் கட்சியிலும இல்லை என்பதையும் வலியுறுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. நிச்சயம் வெற்றியீட்டும் என்று கணிப்புகள் தெரிவித்துள்ளதால் உரிய காலத்தில் தேர்தலை நடத்தவைப்பதே ஐ.தே.கவின் பிரதான நோக்கமாகும்.

எஸ்.பி.திஸநாயக்கவுக்கு விதிக்கப்பட்ட கடூழியச் சிறைத் தண்டனையில் நாட்டுமக்கள் மத்தியல் அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைப்போக்கு அம்பலமாகியுள்ளது. மக்களுக்கு இந்நடவடிக்கை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரசின் இந்தப் போக்கைத் தொடர அனுமதிக்கமுடியாது. அரசுக்கு எதிராகப் பேசும் எதிர்க்கட்சியின் பிரமுகர்களை எப்படியாவது அபாண்டக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திச் சிறைக்குள் தள்ளுவதற்கு அரசு திட்டமிட்டுவருகிறது.

அரசின் இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மக்களை அணிதிரட்டி உரிய பாடம் கற்பிக்கவேண்டிய கடமை ஐ.தே.கவுக்கு உள்ளது - என அவர் மேலும் தெரிவித்தார்.(எ-க)

# உலக வங்கிப் பிரதிநிதி பேச்சுக் குறித்து நம்பிக்கை

கொழும்பு,டிசெ.15

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் மிக விரைவில் மீள ஆரம்பமாகும். பேச்சு முன்னெடுப்பில் நகர்வு நிகழ்ந்துவருகிறது; முன்னேற்றமும் தென்படுகிறது எனத் தெரிவித்துள்ளார் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரல்ட்.

அவர் நேற்றுமுன்தினம் பேச்சுத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:-

உலக வங்கியும், சர்வதேச சமூகமும் பேச்சு மீளவும் ஆரம்பமாகும் என்றே நம்புகின்றன; எதிர்பார்க்கின்றன. பேச்சு மீளவும் ஆரம்பமாவது ஒரு முக்கிய விடயம். மக்களும் இதே எதிர்பார்ப்புடன்தான் இருக்கிறார்கள்.

எனினும், இதற்குக் கால அவகாசத்தை வழங்கி நாமும் உலக வங்கியும் - சர்வதேச சமூகமும் எதிர்பார்த்தே காத்திருக்கிறோம் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நேற்றுமுன்தினமிரவு நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக்சொல்ஹெய்ம் இலங்கை வந்துசேர்ந்தார். அதற்கு முன்னரே உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரல்ட் இப்படிப் பேச்சுக் குறித்து நம்பிக்கை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# வாசகர் திருமுகம்

## கொடிகாமம் வீட்டில் இருந்து தபாற்கந்தோர் இடம்மாறுமா?

**கொ**டிகாமம், பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வீட்டை அப்போதைய கொடிகாமம் தபால் அதிபர் திரு.ஞானலிங்கத்தின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்க தபாற்கந்தோர் இயங்குவதற்குக் கொடுத்தேன். தபால் அதிபர் அக்காலகட்டத்தில் தபாற்கந்தோர் இயங்க வசதியான கட்டடம் இல்லாமல் தேடித்திரிந்த நிலையிலும், அரச திணைக்களங்களுக்குக் கட்டடங்கள் கொடுக்க மக்கள் விரும்பாதபோதும், தபால் கந்தோரின் தேவை கருதி எவ்வித நிபந்தனைகளும் இன்றி கட்டடம் கொடுத்து உதவினேன். நான் தபால் அதிபருக்குக் குறித்த வீட்டை விடும்படி 16.06.2004 இல் மூன்று மாத முன்னறிவித்தல் கொடுத்து வீட்டை விற்றுவிட்டேன். வீடு விற்கும்போது 3 மாதம் முடியும்போது திணைக்களம் எனது முன்னறிவித்தலை மதித்து நடக்கும் என நினைத்தேன். நான் பல தடவை தபால் அத்தியட்சகர் (D.S.) அவர்களுடன் கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு எனது நிலைமையை விளக்கியும் காலத்தைத் தவணைகேட்டுக் கடத்திக்கொண்டே வந்தார்கள். 31.10.2004 வரை அவகாசம் கேட்டுப் பின், 30.11.2004 வரை அவகாசம் கேட்டு கடத்தியுள்ளார்கள். எனக்கோ வீட்டை வேண்டியவர்களிடம் இருந்து கடும் நெருக்குதல். கொடிகாமம் தபால் அதிபரோ அல்லது தபால் அத்தியட்சகரோ இதை உணர்வதாக இல்லை. அவர்கள் காலம் கடத்துவதிலேயே இருந்தார்கள். உருப்படியான நடவடிக்கை உரிய நேரத்தில் எடுக்கவில்லை என்பதே எனது கவலை. வீடு வேண்டியவர்களின் நெருக்குதலைப் பொறுக்கமுடியாமல் (பொறுமைக்கும் எல்லை வேண்டும்) எனது பிரதிநிதியையும் வீடு வேண்டியவர் பிரதிநிதியையும் தபால் அத்தியட்சகர் (D.S.) அவர்களை 06.12.2004 இல் சந்தித்துப் பேசும்படி அனுப்பினேன். தபால் அத்தியட்சகரும், பிரதி தபால் அதிபரும் 10.12.2004இல் வீட்டை விடுவதாகக் கூறினார்களாம். காலதாமதத்தைப் பற்றிக் கேட்டபோது, தபால் அத்தியட்சகர் அவர்கள் கொடிகாமம் தபால் அதிபரின் அசமந்தப் போக்கும், தன்னுடன் ஒத்துழைக்காமையே காரணம் எனவும் பதில் கூறியதாக எமக்குச் சொன்னார்கள். கொடிகாமத்தில் ஓர் இடம் எடுத்து வாடகையும் தீர்மானித்த பின் எனது வீட்டைவிடாது காலதாமதம் செய்தமைக்கு முழுப்பொறுப்பும் திணைக்கள ஊழியர்களின் அக்கறையின்மையை எடுத்துக் காட்டுகிறது. உதவிக்குப் போய் உபத்திரவத்தைத் தேடிக்கொண்ட நிலையிலும், வீட்டை வேண்டியவர்களின் நெருக்குதலாலும் வயதுபோன நோயாளியாகிய நான் எவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கிறேன் என்பதை இந்தப் பொறுப்பற்ற அரச ஊழியர்கள் உணர்வார்களா? இவ்விடயத்தை நான் தபால் மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன்.

6 மாத கால தாமதமாகிய நிலையில் இப்போ தபால் மா அதிபரின் சம்மதம் தேவை எனக் கூறுகிறார்கள். ஆனால், அப்போ தேவைப்படும்போது தபால் அத்தியட்சகரின் சம்மதத்தோடு உடனடியாகவே தபாற்கந்தோர் திறந்துவிட்டார்கள். ஏன் இப்போதும் அதே நடவடிக்கை எடுக்கமுடியாது? தபால் திணைக்கள அதிபரே இது தங்கள் கவனத்துக்கு?

விரைவில் தீர்வுகிடைக்காவிடின் கொடிகாமம் தபாற்கந்தோர் முன் அல்லது தபால் அத்தியட்சகர் (D.S.) காரியாலயத்துக்கு முன் முறைப்படி அறிவிக்க வேண்டியவர்களுக்கு அறிவித்தபின் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் என்பதைச் சகல அரச தரப்பினருக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

**வ.சோமசுந்தரம் - வீட்டு உரிமையாளர்.**

## நிவாரணத்தை நிறுத்துவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது

யாழ். குடாநாட்டில் ஆரம்பத்தில் அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு உலர் உணவு நிவாரணம் மாதா மாதம் வ[illegible]பட்டு வந்தது. பின்னர் அது வெளிநாட்டில் உள்ளோரின் குடும்பத்தினருக்கு மீளாய்வின் மூலம் நிவாரணம் நிறுத்தப்பட்டது. அடுத்த மீளாய்வின்போது வாகனங்கள், கடை வைத்திருப்போரிற்கு நிவாரணம் நிறுத்தப்பட்டது.

இவ்வாறு படிப்படியாக மீளாய்வுகளின் மூலம் உண்மையாக முழு வறுமை நிலையில் உள்ளவர்களை அறிந்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அல்லது அவர்களது அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற நிவாரணம் வழங்குவது யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

மளாய்வினை நோக்கும்போது அதனை அந்தந்தக் கிராம அலுவலர்களுடன், சமுர்த்தி அலுவலர்களும் இணைந்து தத்தமது கிராம மக்களின் உண்மை நிலையை உணர்ந்து நிவாரண விநியோகத்திற்கான சிபார்சினைச் செய்கின்றார்கள். ஆனால், வண்.வடமேற்கு ஜே/99 கிராம அலுவலர் பிரிவில் வசதியான குடும்பங்களுக்கும் நிவாரண விநியோகம் இடம்பெறுகிறது. உண்மையாக வறுமையில் வாடுவோர் மிகவும் பாதிக்கப்படுவதுடன் பெரும் விசனமும் அடைகின்றனர்.

எனவே, இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திருந்தவேண்டும். அதற்காக உரிய பொறுப்பு வாய்ந்த மேலதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு வறியவர்களின் நலனில் அக்கறை கொள்வார்களா?

**- பாதிப்புற்றோர்.**

## கம்பிவேலி குறித்து விளக்கம்

03.12.2004 உதயன் பத்திரிகையில் எமது பகுதியில் கட்டாக்காலி மாடுகள் தொல்லை அகற்ற முட்கம்பி வேலி அடைக்கப்பட்டது என்ற செய்தி பிரசுரமாகியிருந்தது. அதுதொடர்பாகப் பின்வரும் விளக்கத்தைத் தருகின்றோம்.

★ மறவன்புலோ வடக்கு, மேற்குப் பகுதியில் இராணுவத்தால் இவ்வாண்டு விவசாயச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட வயல் நிலங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த சுமார் 5½ மைல் நீளமுட்கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. விதைநெல் பெற்ற விவசாயிகளிடமிருந்து பெற்ற இரண்டு லட்சத்து முப்பத்தெட்டாயிரம் ரூபாவும் கைதடி கமநல நிலையத்தால் வழங்கப்பட்ட மிகுதி தொகையையும் கொண்டே இவ்வேலி எம்மால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக இதுவரை ரூபா நாலரை லட்சம் செலவாகியுள்ளது. இராணுவம் இதற்காக எதுவும் செலவுசெய்யவில்லை.

★ மேலும் இராணுவ அரண்கள், முகாம்கள் ஊடாகவரும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தவே ஆவன செய்யும்படி தென்மராட்சிப் பிரதேச செயலர், இராணுவத்திடம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

**விவசாய சம்மேளனம்,**
**மறவன்புலோ.**

## கச்சேரிக்கு அருகிலுள்ள ஒழுங்கையின் அவலம்

யாழ்ப்பாணம் செயலகத்தை அடுதது ஒரே மதிலால் பிரிக்கப்பட்டிருக்கும் கச்சேரி ஒழுங்கையின் அவல நிலையால் அந்த ஒழுங்கையில் வதியும் மக்களும், அதனூடாகப் போக்குவரத்துச் செய்யும் அநேக மக்களும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். விசேடமாக, தற்போது மழைக்காலம் ஆரம்பமாகிவிட்டதால் ஒழுங்கை முழுவதும் வெள்ளக்காடாகவும் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் மிகப் பெரிய அசௌகரியத்தை அங்கு வதியும் மக்கள் எதிர்நோக்குகிறார்கள். போக்குவரத்துச் செய்ய முடியாதநிலையோடு சேர்ந்து, நுளம்பின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் நோயின் தாக்கத்தையும் எதிர்நோக்குகின்றார்கள்.

கச்சேரிக்கு அண்மித்த நகரின் மத்தியில் அமைந்துள்ள இந்த வீதியைத் திருத்தி அமைக்கும்படி சம்பந்தப்பட்டவர்களிடம் எத்தனையோ முறைப்பாடுகள் செய்தும் அவர்கள் பாராமுகமாகவே இருப்பதற்கான காரணம் தெரியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

**கச்சேரி ஒழுங்கை வாழ்.மக்கள்.**

## திருமண மாலை. Com

உலகெங்கும் பரந்து வாழும் இலங்கைத் தமிழர்களிடையே இலகுவாக திருமண ஏற்பாட்டினைச் செய்யும் நோக்குடன் 'மணமகன்' மற்றும் 'மணமகள்' விவரங்கள் அடங்கிய திருமணமாலை. Com எனும் இணையத்தளம் மற்றும் சஞ்சிகை லண்டனில் வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

உங்கள் விவரங்களும் திருமணமாலையில் வெளிவர வேண்டுமா? 25.12.2004 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுங்கள்.

T.P.: 077 6176467,

யுனிவெக், நிகரை வீதி, சங்கானை. (39643)(30-13-45-26)


## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோவில் பரிபாலன சபை செயலாளரான திரு.செ.நாகரத்தினம் அவர்களது அன்புத் தாயார்

**திருமதி செல்லையா சரஸ்வதி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பர்வதவர்த்தினி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

பர்வதவர்த்தினி அம்மன் கோயில்,
உரும்பிராய். (சி-39602)(13-45-26) **பரிபாலன சபையினர்.**

## சமஷ்டித் தீர்வுக்கு 49 சதவீதமானோர் ஆதரவு

கொழும்பு,டிசெ.15

நாட்டின் சமாதான முயற்சிகள் தொடர்பில் தேசிய கருத்துக்கணிப்பொன்றை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடத்தியதன் விளைவாக தேசியப்பிரச்சினைகு சமஷ்டி முறையிலான தீர்வுக்கு 49 வீதமான மக்கள் ஆதரவாக இருக்கின்றார்களெனச் சுட்டிக்காட்டுகின்றது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் அறிக்கையொன்றை விடுத்திருக்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கருத்துக்கணிப்பில் பங்களிப்பைச் செய்த பெரும்பாலானோர் பிரச்சினை இணக்கப்பாட்டு முறையில் தீர்க்கப்படுவதற்கு விருப்பை வெளியிட்டுள்ளனர் என்று கூறுகின்றது.

சமாதான முயற்சிகளுக்கான யோசனைகள் தொடர்பில் கூடுதலான ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ள அதேசமயம், ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியான சமாதான ஒப்பந்தமொன்று உருவாக்கப்படுமானால் அதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கவும் கணிசமான ஒரு குழுவினர் தயாராக உள்ளனர் என்பதும் கருததுக்கணிப்பில் தெரியவந்துள்ளது. அநீதியான சமாதான ஒப்பந்தமொன்றை வன்முறைகள்மூலம் எதிர்கக 41 வீதமானோர் அனுமதியளிக்கின்றனர். (எ-க-6)

### ரயில்சேவை தடங்கல்

பதுளை மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக அப் பகுதிக்கான ரயில் சேவைகள் நேற்று முன்தினமிரவு முதல் தடைப்பட்டுள்ளன. தொடரும் மழையினால் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக ரயில் பாதைகள் மூடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமிரவு பதுளையில் இருந்து சென்ற தபால் ரயில், பண்டாரவளை, மற்றும் தெமோதரவிலும் கொழும்பிலிருந்து புறப்பட்ட ரயில் நானு ஓயாவிலும் - நிறுத்திவைக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (க-8)

### குருபூசை தினம்

சேர் பொன். இராமநாதன் குருபூசைத் தினவிழா இன்று காலை 7மணிமுதல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

காலை 7மணிக்கு விசேட சங்காபிஷேகமும் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு, சேர் பொன. இராமநாதன் வேதாகம நிறுவன மாணவர்களின் வேத பாராயணம், திருமுறை ஓதலும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (3-202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 - 11 - 1929 | 15 - 11 - 2004 |



**திருமதி செல்லன் குட்டிப்பிள்ளை**


பாசத்தின் பிறப்பிடமே அம்மம்மா
பாரினிலே எம்மைப்
பரிதவிக்க விட்டீரோ?
பார்க்க விழி ஏங்குதம்மா
எங்கு சென்றீர் எம்மை விட்டு?

இந்து இளைஞர் வீதி,
ஆவரங்கால் மேற்கு.
(39533) (42-13-45-26)

இவரின் பிரிவால் துயருறும்:
**பேரப்பிள்ளைகள்.**

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1933 - 05 - 27 | 2004 - 11 - 15 |



**அமரர் அந்தோனிப்பிள்ளை இராயப்பு (இராசு)**

வாழ வைத்த தெய்வம் இன்று வானகம் சென்று – முப்பத்தொரு நாள்களோ?
வையகத்திலே நல்ல கணவனாக, நற்தோவாக வாழ்ந்து – முன்மாதிரி காட்டிய எங்கள் தெய்வமே!
எல்லோருக்கும் நல் ஆலோசகனாக அறிவுரை கூறிய – கலங்கரை விளக்கே!
கனிவான பேச்சாலும் வசீகரப் புன்னகையாலும் எல்லோரையும் – அரவணைக்கும் அன்பின் சிகரமே!
முப்பத்தொரு நாள்களென்ன முப்பத்தொரு ஜென்மம் கடந்தாலும் – மாறாது உம் நினைவு எம் நெஞ்சைவிட்டு!

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக புனித காணிக்கை மாதா ஆலயத்தில் இன்று (15.12.2004) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் மதிய நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தவசிகுளம்,
மிருசுவில்.
(39558) (42-13-45-26)

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## நெஞ்சைவிட்டகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 04 - 10 - 1954 | 16 - 11 - 2004 |



யாழ்.,காலையடி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும்
சுவிசில் லூட்சேர்ன் மாநிலத்தில் வில்லிசாவை வதிவிடமாகக் கொண்டவருமான

**அமரர் இராசையா இந்திரகுமார்**

16-12-2004


கடல் கடந்து கடமை செய்த கண்ணியம் மிக்கவனே!
எம் குடும்பத்தின் சுமைதாங்கி ஏற்றமுறச் செய்தவனே!
உன் இல்லத்தைக் கட்டியெழுப்பக் கனவுகள் கண்டாயே
கனவை நனவாக்குமுன் காலன் கொடுமை செய்தானே
இந்திரனே மீண்டும் வந்தெமக்கு விரும்பியதைச்செய்வாயோ!
உன் அன்னை உடன் பிறந்தவர்கள் மருமக்கள் துடியாய்த் துடிக்கின்றோம்.
உன் ஆத்மா ஆண்டவன் பாதமதில் அமைதியடையட்டும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உம்மை என்றும் நினைவாக வாழும்:
**அம்மா, மனைவி,பிள்ளைகள்,**(சுவிஸ்),
**மாமன், மாமி** (கனடா)
**சகோதரிமார், மைத்துனர்மார், மருமக்கள்,**
**சகோதரர்மார், மைத்துனிமார், பெறாமக்கள்,**
காலையடி, பண்டத்தரிப்பு.

தகவல்:
க.அருந்தவகிருஷ்ணன்
(மருமகன் -அமெரிக்கா).
(39606) (42-13-45-26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28 - 08 - 1967 | 15 - 12 - 2003 |



**அமரர் சோமசுந்தரம் திருவருட்செல்வன்**

திருவே எம் செல்வனே சிந்தையில்
நிறைந்த உன் சிரித்த முகம் எங்கே?
தீபமாய் ஒளிவிட்ட தியாகச் செம்மல் எங்கே?
துடிக்குதெடா எம் உள்ளம் தேற்றி
விடை சொல்ல நீ இங்கில்லை!
உயிராய் நேசித்த உன் உறவுகளைப்
பிரிந்து ஓராண்டு சென்றாலும்
ஆறாது எம் துயரம்.
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

50/06, செட்டித்தெரு
நல்லூர்.
தொ.பே.இல: 0776015311 (39615)

உன் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(12-13-45-26)




# “..மேசையில் தட்டிப் பாட்டுப்பாடிய அனுபவம் என்னைக் ‘கொங்கோ ட்ரம்ஸ்’ கலைஞனாக்கியது..”

**யாழ். மண்ணில் ‘கொங்கோ ட்ரம்ஸ்’ வாத்தியக் கருவியை முதன்முதலாக அறிமுகம் செய்த ‘கொங்கோ ட்ரம்ஸ்’ வாத்தியக்கலைஞர் தனபாலுடனான செவ்வி இது.**

*கேள்வி:-* உங்கள் ஆரம்பகால இசை அனுபவங்கள் பற்றிக் கூறுங்களேன்.......?

*பதில்:-* நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படிக்கும்போது மாணவர்களுடன் சேர்ந்து மேசையில் தட்டி பாட்டுப் பாடுவதுண்டு. அப்போது எனக்குப் 15 வயது. பின்னர் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நடந்த வாணி விழா நிகழ்வு ஒன்றில் நாங்கள் ஒரு இசை நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தினோம். அதுதான் எனது முதல் அனுபவம். இதில் என்ன ஆச்சரியம் என்றால், தடித்த கடதாசியினால் இரண்டு பேணிகளை மூடி நான் தயாரித்த “கொங்கோ ட்ரம்ஸ்” இனையே பயன்படுத்தினேன். நிகழ்ச்சி சிறப்பாக அமைந்தது.

*கேள்வி:-* நீங்கள் ‘கொங்கோ ட்ரம்ஸ்’ வாத்தியக் கலையையாரிடம் கற்றீர்கள்?

*பதில்:-* நான் யாரிடமும் கற்கவில்லை. திரைப்படங்களிலும், பத்திரிகைகளிலும் ‘கொங்கோ ட்ரம்ஸ்’ வாத்தியக்கருவியைப் பார்த்து வியந்ததுண்டு. எப்படியாவது அந்த இசைக்கருவியை இசைக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு நிறையவே இருந்தது. அந்த ஆவல் இன்று இந்தளவிற்கு என்னை இசைத்துறையில் வளர வைத்துள்ளது.

*கேள்வி:-* “கொங்கோ ட்ரம்ஸ்” என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது?

*பதில்:-* ஆபிரிக்காவில் கொங்கோ வடி நிலத்தில் உள்ள மக்கள் தகவல் தொடர்புகளை அனுப்புவதற்கு மேற்படி ட்ரம்ஸ் இனை அதிகமாகப் பயன்படுத்தினார்கள். இதிலிருந்து இக்கருவி ‘கொங்கோ ட்ரம்ஸ்’ எனப்பெயர் பெற்றது.

*கேள்வி:-* நீங்கள் இதுவரை உங்கள் கலைத்திறமையினை ரசிகர்களுக்கு வெளிக்காட்டிய இசைக்குழுக்கள் பற்றி......?

*பதில்:-* ஆரம்ப காலத்தில் கலாலயா, கண்ணன், இரட்டையர் குழு, மண்டலேஸ், கோணேஸ், ராஜன்ஸ், ரங்கன், சாரங்கா போன்ற இசைக்குழுக்களில் எனது திறமையை வெளிக்காட்டினேன். தற்போது ‘சாரங்கா’ இசைக்குழுவில் பணியாற்றி வருகின்றேன்.

*கேள்வி:-* வேறு கலைகளிலுள்ள ஈடுபாடுபற்றி.......?

*பதில்:-* நாடகத்துறையில் எனக்கு ஈடுபாடு உண்டு. 1975 காலப்பகுதியில், யாழ்.திறந்த வெளி அரங்கில் மேடையேற்றப்பட்ட ‘லண்டன் மாப்பிள்ளை’ நாடகத்தில் நீக்கிரோ மாப்பிள்ளையாக நடித்தேன். அது அந்தக் காலத்தில் பெரும் வரவேற்பைப்பெற்ற நாடகம். 1979இல் இலங்கையில் முதன் முதலாக சினிமாஸ் கோப்பில் தயாரிக்கப்பட்ட ‘தெய்வம் தந்த வீடு’ படத்தில் கண்ணன் கோஷ்டியினருடன் நடித்துள்ளேன்.

*கேள்வி:-* நீங்கள், இந்தக் கலைத்துறையால் மக்களுக்கு ஆற்றிய பங்களிப்புகள் பற்றி.......?

*பதில்:-* யாழ். லயன்ஸ் கழகத்தினால் 1977ஆம் ஆண்டு காலப் பகுதியில் புற்று நோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று அமைப்பதற்காக, ‘யாழ்.லயன்ஸ் களியாட்ட விழா’ என்னும் நிகழ்வு யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. அதற்கு நான் பெரும் பங்களிப்பை ஆற்றியிருந்தேன். மற்றும் ஜெயப்பூர் செயற்கைக்கால் நிதிக்காக ஜோ.எகட்டனின் ஆதரவில் ‘சித்திரையில் ஒரு மாலை’ என்னும் நிகழ்விற்கு பின்னணி வாத்தியக் கலைஞராகப் பங்குபற்றினேன். 1991ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றச் சுகாதாரப் பகுதியினரால் நிகழ்த்தப்பட்ட ‘சுகநலம்’ தெருக்கூத்து நிகழ்விற்கு பின்னணி இசை வழங்கினேன். இதனைப் பாராட்டி, மில்க்வைற் கனகராசா அவர்களால் எனக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டது. அப்போது நான் மாநகர சபையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

*கேள்வி:-* நாடகங்களுக்குப் பின்னணி இசை வழங்கியமை பற்றிக் கூறுங்களேன்...?

*பதில்:-* யாழ்.நகரில் கண்ணி வெடி, மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாடக நெறியாளர் தே.தேவானந்த் அவர்களின் நெறியாள்கையில் உருவான, 152 தடவைகள்




மேடையேறிய ‘நெஞ்சுறுத்தும் கானல்’ நாடகத்திற்குப் பின்னணி இசை வழங்கினேன். இதனை நினைக்கும போது எனக்குப் பெருமையாக இருந்தது. பின்னர் “முடக்கம்” என்னும் விழிப்புணர்வு நாடகத்திலும் பணியாற்றியுள்ளேன். அத்தோடு யாழ்.வீரசிங்கம் மண்டபத் தில் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற ‘மானுடத்தின் தமிழ்க் கூடல்’ நிகழ்வில் இடம் பெற்ற தே.தேவானந்தின் மற்றொரு படைப்பான ‘அக்கினிப்பெருமூச்சு’ என்னும் நாடகத்திற்கும் இசை வழங்கியுள்ளேன்.

*கேள்வி:-* நீங்கள் வடக்கு-கிழக்கு மாகாணததில் “கொங்கோ ட்ரம்ஸ்” இனை முதன்முதலாக அறிமுகப்படுத்தியது பற்றி....?

*பதில்-* நான் 1971 ஆம் ஆண்டில் ‘கலாலயா’ இசைக்குழுவில் பணியாற்றும் போது ‘கொங்கோ ட்ரம்ஸை’ முதன் முதலாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அறிமுகம் செய்தேன்.

*கேள்வி:-* நீங்கள் இதுவரை எந்தெந்தப் பாடகர்களுக்கு பின்னணி இசை வழங்கியுள்ளீர்கள்?

*பதில்:-* அக்காலப் பிரபல பாடகர்களான அமுதன் அண்ணாமலை, ஸ்ரனி சிவானந்தன், நித்தி கனகரத்தினம், ஏ.ஈ.மனோகரன், கனகாம்பாள் சதாசிவம், கலாவதி, முத்தழகு, எம்.எஸ்.பெனாண்டோ, ராமச்சந்திரன், சுஜாத்தா அத்தனாயக்கா, ரொனி ஹாசன் போன்ற பாடகர்களுக்கு ‘கொங்கோ ட்ரம்ஸ்’ வாசித்துள்ளேன். இவர்கள் அனைவரும் ஈழத்துப் பாடகர்கள்.

*கேள்வி:-* தென்னிந்தியப் பாடகர்களுக்கு பின்னணி இசை வழங்கிய அனுபவம் பற்றி......?

*பதில்:-* 1979 இல் கண்ணன் இசைக் குழுவில் இருந்த காலப்பகுதியில் தென்னிந்தியப் பிரபல பாடகர்கள் ரி.எம். சௌந்தர்ராஜன், ஏ.எல்.இராகவன், எல்.ஆர்.ஈஸ்



வரி, ரி.எல்.மகராஜன், யமுனா ராணி, சரளா, செல்வகுமார் ஆகியோர் ஈழத்திற்கு வந்தபோது, இந்திய இசைக் கலைஞர்களுடன் சேர்ந்து யாழ். மண்ணில் முதன் முதலாக தனி ஓர் ஈழமகனாக ‘கொங்கோ ட்ரம்ஸ்’ இசைத்துள்ளேன்.

*கேள்வி:-* தென்னிந்தியா சினிமா நட்சத்திரங்களைச் சந்தித்த அனுபவங்கள் பற்றி....?

*பதில்:-* தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள் எனும்போது மேஜர் சுந்தர்ராஜன், ஜெய்சங்கர், ராதிகா, நாகேஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில், கண்ணன் இசைக் குழுவின் “கொங்கோ ட்ரம்ஸ்” வாசித்தேன். இதனால் அவர்களின பாராட்டு எனக்குக் கிடைத்தது.

*கேள்வி:-* திருமறைக்கலாமன்ற இசைக் குழுவில் நீங்கள் அங்கம் வகிப்பதாக கூறப்படுகின்றது அதுபற்றி...?

*பதில்:-* நான் 1990 ஆம் ஆண்டு முதல் நான் திருமறைக்கலாமன்ற இசைக்குழுவில் அங்கம் வகித்து வருகின்றேன். இதில் குறிப்பாக ஒரு விடயத்தைக் கூற வேண்டும். 1990ஆம் ஆண்டுமுதல் திருமறைக்கலாமன்றத்தால் நடத்தப்பட்டு வரும் பிரமாண்டமான தயாரிப்பான “திருப்பாடுகளின் காட்சி” நிகழ்விற்கு தவறாது பின்னணி இசை வழங்கி வருகின்றேன்.

*கேள்வி:-* வெளிநாடுகளில் உங்கள் திறமையைக் காட்டிய அனுபவம் ஏதாவதுண்டா?

*பதில்:-* பிரான்ஸ் நாட்டில் 3மாதங்கள் தங்கியிருந்தேன். அங்கு எனது சகோதரர்களின் முன்னணி இசைக் குழுக் களான ‘இளைய நிலா’, ‘ஸப்தஸ்வரங்கள்’ ஆகியவற்றில் இணைந்து பின்னணி இசை வழங்கினேன். இவர்களுடன் ஜேர்மனிக்கும் சென்று கலை நிகழ்வுகளில் பங்குபற்றினேன்.

*கேள்வி:-* வெளிமாவட்டங்களில் உங்கள் கலைப் பயணம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

*பதில்:-* 1978 ஆம் ஆண்டு கண்ணன் இசைக்குழுவுடன் இலங்கைப் பல்கலைக் கழக கட்டுப்பெத்தவளாக தமிழ்ச்சங்கத்தில் பாலேந்திராவின் நெறியாள்கையில் உருவான ‘பலி’, நட்சத்திரவாசி ஆகிய பிரபல நாடகங்களிற்கு வயலின் இசைக் கலைஞர் சற்குருநாதனுடன் பின்னணி இசை வழங்கியுள்ளேன். தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களிலும் எனது பணி தொடர்ந்து நடைபெற்றது.

கேள்வி:- தற்போதைய கலைஞர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

மெல்லிசைக் கலைஞர்கள் கர்நாடக சங்கீதத்தை முறையாகக் கற்றுத் தேற வேண்டும். கலைஞர்களிடையில் போட்டி பொறமை இல்லாத நிலைப்பாடு தொடர்ந்து பேணப்படவேண்டும்.

கலைஞர்கள் சினிமாவைத் தவிர்ந்து

**செவ்வி:- பசீர்**

தமது சொந்தப் படைப்புகளை, மக்களைச சீர்திருத்தக் கூடிய வகையில் உருவாக்கி வெளியிட வேண்டும். கலைஞர்கள் மக்கள் மதிக்கும் படியாக நடக்க வேண்டும். இதுவே நான் எமது மண்ணின் கலைஞர்களுக்கு கூறும் அறிவுரை. ★

## மேலைநாட்டு இசைக்கலைஞர்கள் வரிசையில்:::

### பீதோவன் (1770- 1827)



பீதோவன் ஜேர்மன் நாட்டில் பொன் என்னும் (Bonn) நகரத்தில் ஒரு இசைக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தையும் தாத்தாவும் பொன் நகர் அரசவைக் கலைஞர்களாக விளங்கியவர்கள். இவர் இளம்வயதிலேயே மிகுந்த புத்தி சாதுரியம் உள்ளவராக விளங்கினார். பிரெஞ்சு, இலத்தீன் மொழிகள் கற்று அதில் பாண்டித்தியம்பெற்றார். இவரின் தந்தையார் தனது மகனும் மொஸார்டைப் போன்று இளவயதிலேயே இசையில் திறமையடைய வேண்டுமென்று விரும்பினார்.

இவர் தனது பதினொராவது வயதிலேயே இசையில் நாட்டம் கொள்ளத் தொடங்கினார். 1792 இல் வியன்னாவிற்குச் சென்று ஹேடன் எனும் இசைக்கலைஞரிடம் இசை கற்கத் தொடங்கினார். இதில் திருப்தியடையாமல் (Schenk) சென்க் எனும் மற்றோர் இசைக் கலைஞரிடம் இசை கற்கத் தொடங்கினார்.

இயற்கையை நேசிக்கும் பண்பு இவரிடம் மிகுந்து இருந்தது. கிராமப் புறங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளின்போது தனது மனதில் தோன்றும் எண்ணங்களையெல்லாம் எழுதி வருவதைப் பழக்கமாகக் கொண்டார். இதனாலேயே இவரது இயற்கை பற்றிய (Cpastoral Symphony) மிகவும் புகழ் பெற்றது. இந்த சிம்பனியில் பறவைகளின் ஒலி, அருவிகளின் ஓசை, ஆடுகளின் ஒலி சிறப்பாக இடம் பெற்றுள்ளன. இவர் பிராக், பேர்லின், டெஸ்டன் பேர்க் போன்ற இடங்களுக்குச் சென்று பல இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

அவர் விரும்பிய பெண்ணிற்காக Moonlight Sonataவை இயற்றினார். நாளாக இவரின் காது கேளாத் தன்மையை மக்கள் அறியத் தொடங்கினர். இதனால் மிகவும் விரக்தியடைந்தார். இந்த நேரத்தில் Heiligenstadt Testament என்னும் இசைக்கோலத்தை எழுதினார். இவர் இயற்றிய சிம்பனி 3 நெப்போலியன் நினைவாக எழுதியதாகும். ஆனால், நெப்போலியன் தன்னை அரசனாகப் பிரகடனப்படுத்தியதால் கோபமுற்று அவன் பெயரை அழித்து விட்டு To the Memory of a Great Man என மாற்றி எழுதினார். இவர் 1826 இல் உடல்நிலை குன்றியபோது தமது சகோதரருடன் வாழ்ந்து வந்தார். 1827 இல் மார்ச் 27 இல் இவ்வுலக வாழ்வைவிட்டு நீங்கி புகழுடம்பு எய்தினார்.



நல்லூர் புனித யாக்கோபு ஆலயம் வாலிபர் சங்கத்தினால் மேடை ஏற்றப்பட்ட ‘வேற்றுமையில் ஒற்றுமை முடிவு ஓர் கற்பனை’ என்னும் நாடகத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

# கலாபூஷணம் விருது பெற்ற நாட்டுக்கூத்து கலைஞன்



பிரபல நாட்டுக்கூத்து அண்ணாவியார் வஸ்தியாம்பிள்ளை அல்பிறட்டுக்கு அண்மையில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர் கலாபூஷணம் மெற்றாஸ் மெயிலால் நடத்தப்பட்ட முதியோர் கௌரவிப்பு நிகழ்வில் சிறந்த நடிகனாகவும் சிறந்த பாடகனாகவும் தெரிவு செய்யப்பட்டு கலைமாமணி பட்டமும் தங்கப்பதக்கமும் வழங்கிக் கௌர விக்கப்பட்டது.

கடந்த 42 வருடங்களுக்கு மேலாக நாட்டுக் கூத்துக் கலையில் ஈடுபாடுகொண்டு தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்தவர் அண்ணாவியார் அல்பிரட். இவர் தனது 14ஆவது வயதிலேயே (1954 ஆம் ஆண்டில்) தனது தந்தையாரின் நெறியாள் கையில் உருவான புனிதவதி நாட்டுக்கூத்தில் அரசன் பாத்திரம் ஏற்றுத் தனது கலைட் பயணத்தை ஆரம்பித்தவர்.

மிக்கோர் சிங்கம் புலவர், கிறிஸ்தோப்பர் புலவர், சூசைப்பிள்ளை புலவர் ஆகிய அண்ணாவியார்களின் நாட்டுக்கூத்துக்களை பழக்கி மேடையேற்றிய பெருமைக்குரியவர்.

1978ஆம் ஆண்டு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் துணைவேந்தர் வித்தியானந்தனால் சங்கிலியன் நாட்டுக்கூத்தில் அரசனாக நடித்தமைக்காக பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டதுடன், ‘தேசியக் கலைவேந்தன்’ என்னும் பட்டமும் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இவருக்குக் கலைப்பொக்கிஷம், சிம்மக்குரலோன். எழிலிசை மன்னன், கலைக் குரிசில், நாடகமா மன்னன். மிருதங்க வித்துவான், நாட்டுக்கூத்தின் சிறந்த அண்ணாவியார், பத்மஸ்ரீ, யாழ்.ரத்னா, கலைஞானகேசரி, கலைமாமணி போன்ற பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

-எ.தமிழினியன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்
இன்றைய 15.12.2004 பட்டமளிப்பு விழாவில்
விஞ்ஞானக் கல்வியில் முதுமாணிப் பட்டம்பெறும்
எமது நண்பரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
விரிவுரையாளருமாகிய

**திரு.கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்**

B.Sc.(Hons) Agriculture M.Sc.(Science Education) PGDE
அவர்கள் பல்கலையும் கற்று சீரோடுஞ் சிறப்போடும்
நீடுழி வாழ உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(39525)(42-16-45-26) நண்பர்கள் அச்சுவேலி.

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தினால் நவம்பர் 22 முதல் 30 வரையில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த புத்தக விற்பனையைப் பொதுநிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீடித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573.
(C/39459) (42-16-45-26)

## முதலாம் வருட இதயஅஞ்சலி



திருமதி
# தனபாலசிங்கம் நேசமலர்

மண்ணில் 12-12-1937 விண்ணில் 27-11-2003

திதி: சதுர்த்தி

அன்னையே! எமது அன்புக்குரிய தாயே!
துடியாய்த் துடிக்கின்றோம் எம்மைத் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றீர்கள் அம்மா? தேடுகின்றோம்
உங்கள் திருமுகத்தைக் காணவில்லையே எங்கும்!
நீங்கள் மறைந்து ஓராண்டு கடந்துவிட்டாலும்
எங்களது நெஞ்சங்களில் நிறைந்தே இருப்பீர்கள்!
பக்குவமாய் வளர்த்தெடுத்து நன்றாக வாழச்செய்து
மீளாத்துயில் கொண்ட உங்களை மறக்கமுடியவில்லையே!

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர் தனபாலசிங்கம்,
பிள்ளைகள்: வசந்தி - சிவகுமார்
புரந்தரகுமார் - சாந்தி,
ஜெயந்தி - றெமியூஸ்,
சுகந்தி - சிவராஜா
சத்தியன், உற்றார்,
உறவினர், பேரப்பிள்ளைகள்.

புதுவீதி,
அத்தியடி.
(39625)(26-16-45)

## சேருவில பகுதியில் 4 தமிழர்கள் கடத்தல்

திருகோணமலை சேருவில பகுதியில் நான்கு தமிழர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடந்த 12ஆம் திகதி இரவு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

சேருவிலவைச் சேர்ந்த பத்மநாதன் (வயது 22), தவராசா (வயது 22), சாஸ்திரி (வயது 18), ரூபன், (வயது 19) ஆகியோரே கடத்திச் செல்லப்பட்டவர்களாவர். நேற்றுமுன்தினம் இரவு சேருவில கிராமத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் சிலரே மேற்படி நால்வரையும் கடத்திச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளே இவர்களை கடத்திச் சென்றிருப்பார்கள் என இராணுவத் தலைமையகம் சந்தேகம் வெயியிட்டுள்ளது. எனினும் இது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

(க-8)

## இந்திய செயலமர்வில் சாவகச்சேரி பிரதிநிதியும்

தென்மராட்சி,டிசெ.15.

சர்வதேச லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நடைபெறவுள்ள செயலமர்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன்.செ.கா.நவரத்தினம் பங்குபற்றவிருக்கின்றார்.

நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள இந்த வதிவிடக் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவருக்கு சர்வதேச லயன்ஸ் கழகப பிரதி ஆளுநர் லயன் அசோக் மேத்தா அழைப்பு விடுத்திருந்தார். (3-117-202)

## பிரதேச சபை உப அலுவலகம் திறப்பு

செம்பியன்பற்று, டிசெ.15

வடமராட்சி கிழக்கு - பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகமான செம்பியன்பற்று அலுவலகம் மருதங்கேணியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

ஆனால், இதற்குரிய ஆளணியினர் நியமிக்கப்படாமையினால் இந்த அலுவலகம் பூட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் அலுவலகப் பகுதி கால்நடைகளின் தங்குமிடமாக மாறியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (3-203-36)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

கட்டணம் 1000/=வுடன் மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. By. விக்னேஸ்வரன் ஆசிரியர். காலை வகுப்புகள். (39634)
426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

## பழுது பார்த்தல்

வீடியோ கெமரா, டிஜிட்டல், ஸ்டில் & ஸூம் கெமரா பிளேஷ்ஸ்சேர்வீயும், அப்பாஸ் கன்ஸ் லென்சஸ்



* 40 தொழில்நுட்ப வல்லுநர்கள்
* 30 வருட அனுபவம்
* ஒரு வருட உத்தரவாதம்
* ஒரே நாளில் துரித சேவை

**DURST ELECTRONICS (PVT) LTD.**
364, Galle Road,
Kollupitiya, Col-3
Tel: 2575480, 2565756
Opp.P.G. Martin & H.N.B. Near Tourist Hotel Renuka. On Sea side

## வியாபார ஸ்தலம் வாடகைக்கு!

திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரிக்கு அண்மையில் பலாலி வீதியில் சுமார் 4000 சதுர அடி கடைக் கட்டடம் வாடகைக்குண்டு. சுப்பர் மார்க்கற் போன்ற பெரிய அளவிலான வியாபாரத்திற்கு உகந்தது. தற்பொழுது கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் உடன்தொடர்பு கொண்டால் உங்கள் தேவைக்கு ஏற்றாற்போல் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
52, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி 021 - 222 5187.
(39046)(26-16-45)

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 13 - 04 - 1946



மறைவு 14 - 11 - 2004

**திருமதி கிருஷ்ணபிள்ளை (போமன்) வசந்தாதேவி**

அன்போடும் பண்போடும் வாழ்ந்தவரே - உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை (போமன்) அவர்களின் மனைவி வசந்தாதேவியின் 31ஆம் நாள் நிகழ்வுகள் இன்று (15-12-2004) புதன்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்நது மதியபோசனமும் நிகழவுள்ளதால் அந்த வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு.
(39638)(26-16-45) - குடும்பத்தினர்.

உடன் இணையுங்கள்
எதிர்காலத்தின் சவால்களை
வெற்றியுடன் முகம்கொள்ளும் பட்டயக்
கணக்காளர் ஆகிட....



புதிய பிரிவுகள் ஆரம்பம்
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
இச்சலுகை 31.12.2004 வரை மட்டுமே

**aat - July 2005**

| Foundation | Intermediate |
|---|---|
| 2500/= | 3500/= |

Final 4500/=

**Chartered - July 2005**

| Foundation | Intermediate |
|---|---|
| 3500/= | 4500/= |

* அனுமதிக் கட்டணம் 1000/= மட்டுமே.
* தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* விரிவுரைகள் அனைத்தும் 08.01.2005 இல் ஆரம்பமாகின்றன.

அலுவலக நேரம்
திங்கள், புதன், வெள்ளி,
சனி, ஞாயிறு தினமும்
காலை 9.00 - மதியம் 1.00 வரை

**IPAS** 199, பிரதான வீதி, (பிறிமியர் பேக்கரி மேல்மாடி), யாழ்ப்பாணம். ☎: 0777-563294

# பண்டிகைக் கால பரிசு மழை!




● முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்

மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்

AUTHORISED AGENT
MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)

● அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic Lisence No. C/130/2004

# சிறைச்சாலையின் குறைநிறைகளை பார்க்கவே எம்.பிக்கு சிறப்புரிமை

## கைதியை சந்திக்கவல்ல என்கிறார் ஆணையாளர்

கொழும்பு, டிசெ.15

நாடாளுமன்ற உறுப்பினரொருவர் சிறைச்சாலை செல்வதற்கு இருக்கும் சிறப்புரிமையைப் பயன்படுத்தி சிறைச்சாலையின் குறைநிறைகளை அவர் பார்த்தறியமுடியும். அந்தப் போர்வையில் கைதியாக இருக்கும் எஸ்.பி. திஸநாயக்கவைப் பார்க்கமுடியாது. அதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் றூமி மர்சூக் நேற்றுமுன்தினம் இப்படித் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

சிறையில் இருக்கும் எஸ்.பி. திஸநாயக்கவை பார்வையிட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று ஆணையாளர் றூமி மர்சூக் கூறியிருந்தபோதும் நேற்றுமுன்தினம் ஐ.தே.க. பிரதித்தலைவர் கரு ஜயசூரிய எம்.பி. சிறைக்குச் சென்று திஸநாயக்கவைச் சந்தித்திருந்தார். அது குறித்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார் சிறைச்சாலைகள் ஆணையாளர்.

அவர் மேலும் கூறியதாவது:-

நேற்றுமுன்தினம் நாம் சில முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளோம். இதன்படி இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் மட்டுமே குறுகிய நேரம் சிறைச்சாலைக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். முன்னாள் எம்.பிக்கள் மற்றும் இப்போதைய எம்.பிக்களின் மெய்ப்பாதுகாவலர்கள் உள்ளே செல்ல அனுமதி இல்லை. அத்துடன், எம்.பிக்கள் செல்போன்களைக் கொண்டு செல்லமுடியாது. தம்முடன் ஆயுதங்கள் எதனையும் எடுத்துச் செல்லவும் முடியாது.

அரசமைப்பின்படி எம்.பிக்களுக்கு உள்ள சிறப்புரிமையைப் பயன்படுத்தி அவர்கள் சிறைக்குள் சென்றாலும் அங்கு சிறையின் குறைநிறைகளை மட்டுமே அவர்கள் பார்க்கமுடியும். இந்தப் போர்வையில் இனி கைதி ஒருவரைத் தொடர்ந்து சந்திப்பதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம். இதனை ஆணையாளர் என்ற அடிப்படையில் நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் -என்றார் அவர். (எ-க)

# எஸ்.பிக்கு கண்சிகிச்சை வியாழனன்று நடக்கும்!

## அனுமதிகோரி சட்டத்தரணிகள் கடிதம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்துவரும் எஸ்.பி.திஸநாயக்கவை நாளை கண்சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு உரிய அனுமதியை வழங்குமாறுகோரி அவரின் குடும்ப சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா நேற்றுமுன்தினம் சிறைச்சாலைகள் ஆணையாளர் றூமி மர்சூக்கிடம் கடிதமொன்றைக் கையளித்துள்ளார்.

எஸ்.பி. திஸநாயக்கவிற்கு கண்சிகிச்சை வழங்கப்பட வேண்டுமென்ற ஸ்ரீஜயவர்த் தனபுர வைத்தியசாலை மருத்துவரொருவரின் சான்றுக் கடிதமும் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டிருந்த சட்டத்தரணியின் கடிதத்துடன் இணைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எஸ்பி. திஸநாயக்க கைதுசெய்யப்பட்ட தினத்தில் அவருக்கு கண்சிகிச்சை வழங்க முன்னதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்று குறிப்பிட்ட அவரின் சட்டத்தரணி, அந்தத்தினம் தவறிய காரணத்தினால் நாளை சிகிச்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார். (க-8)

### கடும் மழை, வெள்ளம் காரணமாக

# சாதாரணதரப் பரீட்சையை ஒத்திப்போடக் கோரிக்கை

### மட்டக்களப்பு அரச அதிபர் வற்புறுத்தல்

கொழும்பு,டிசெ.15

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமான சாதாரண தரப் பரீட்சைகளை ஒத்திப்போடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் கடும் மழை கொட்டுகின்றது. அம்பாறை, மட்டு.மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

பின்தங்கிய பகுதி மாணவர்கள் சிலர் பரீட்சைக்குத் தோற்றவேயில்லை. அவர்கள் தங்கியிருந்து பரீட்சைக்குத் தயாராக இடமும் இல்லை.

எனவே இப்பரீட்சையை ஒத்திப்போடவேண்டும் என மட்டு.மாவட்ட அரச அதிபர், கல்வி அமைச்சரைக் கோரியுள்ளார்.

அதேவேளை, மட்டக்களப்பில் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெல்லாவெளிப் பிரதேசம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர்.

வெளியேறிவரும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு விடுதலைப் புலிகள் படகுகள் மூலம் அப்புறப்படுத்தி வருவதோடு, அவர்களுக்கு உதவிகளும் புரிந்து வருகின்றனர்.

இவ்வாறு மட்டு மாவட்ட அரச அதிபர் வேல்முருகன் சண்முகம் தெரிவித்தார். (எ-க)

# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு புலிகள் விசேட படகுச்சேவை

### பெரியமுகத்துவாரம் தாம்போதியில்!

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் விடயத்தில் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறையினர் பெரும் அக்கறை காட்டிவருகின்றனர்.

ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியிலுள்ள பெரிய முகத்துவாரம் தாம்போதி ஊடாக வெள்ளம் பாய்ந்துகொண்டிருக்கிறது. இதனால், பொதுப் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களும் - குறிப்பாக ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளும் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் வழங்கிய ஆலோசனைக்கமைவாக உடும்பன் கோட்ட அரசியல்துறையினர் பெரியமுகத்துவாரம் தாம்போதி ஊடாக மக்கள் பயணம் செய்ய இலவசப் படகுச்சேவை ஒன்றை நேற்றுமுன்தினம் நடத்தினர்.

அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன், உடும்பன் குளக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலாகரன் ஆகியோர் அப்பகுதிக்கு நேரடியாக விஜயஞ்செய்து இந்தப் படகுச் சேவை சீரானமுறையில் நடைபெற ஆவனசெய்தனர். விடுதலைப் புலிகள் நடத்திய இப்படகுச் சேவை தமக்குப் பெரும் பயனளித்ததாக பொது மக்களும் மாணவர்களும் தெரிவித்தனர்.

தொடர்ந்து அம்பாறையில் மழை பெய்து வருகின்றது. இப்பகுதியினூடாக வெள்ளம் பாய்ந்தால் தொடர்ந்தும் இலவச படகுச்சேவை நடைபெறுமென அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். (எ-க-6)

# ஜனாதிபதியின் மாத்தறை பேச்சு எதிரணியை மிரட்டும் நடவடிக்கை

### சீறுகின்றார் சந்திரசேகரன்

கொழும்பு,டிசெ.15

ஜனாதிபதியின் 10 ஆண்டுகால ஆட்சி நிறைவை முன்னிட்டு மாத்தறையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஆற்றிய உரை எதிர்க்கட்சிகளின் ஜனநாயக உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் எச்சரிக்கை விடுப்பதாக அமைந்துள்ளதென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மகேஸ்வரன் எம்.பி.செங்கோலைத் தூக்கிச் சென்றமை மிகவும் மோசமான செயல் என வர்ணிக்கப்படுகிறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும், நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயும் கூட இவ்வாறு செங்கோலை அப்புறப்படுத்தியிருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி, சபாநாயகரின் ஆசனத்தில் மற்றவர்கள் அமர்ந்த சம்பவங்களும் கூட நடந்துள்ளன.

அவர்களின் மீதெல்லாம் நாடாளுமன்ற சபாநாயகரே எதுவிதமான நடவடிக்கையுமே எடுக்கவில்லை.

ஆனால், மகேஸ்வரன் எம்.பி. நடந்துகொண்ட விதத்தை மட்டும் ஆளும்கட்சி பெரிதுபடுத்துவதுடன் அது விடயத்தில் ஐ.தே.கவும் அசட்டையாக நடந்துகொள்வதைப் பார்த்து இப்போக்கு மகேஸ்வரன் எம்.பி. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதாலோ என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டால் அது நியாயமானதே.

அத்தோடு, எதிர்க்கட்சிகளை பயமுறுத்தும் விதத்தில் ஜனாதிபதி பேசிவருவது ஓர் அராஜக நிலையையே நாட்டில் தோற்றுவிக்கும்.

இத்தகைய போக்கை மலையக மக்கள் முன்னணி கண்டிக்கின்றது.

இத்தகைய மிரட்டல்களிலிருந்து ஒவ்வொரு கட்சியும் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது என்று முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-க)

# உயர் நீதிமன்றை அவமதித்தார் என அனுராவுக்கு எதிராக மனுத்தாக்கல்

கொழும்பு,டிசெ.15

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் உல்லாசத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க உயர்நீதிமன்றை அவமதித்துள்ளார் எனத் தெரிவிக்கும் மனு ஒன்று நேற்றுமுன்தினம் அம்மன்றிலேயே தாக்கல் செய்யப்பட்டது.

விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சரும் குருநாகல் மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவே இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

நவம்பர் மாதம் பொலன்னறுவையில் அனுரா பண்டாரநாயக்க பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் உயர் நீதிமன்றை அவமதித்தார் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போது எஸ்.பி.திஸநாயக்க சிறையில் உள்ளார். உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படியே அவர் சிறைவாசம் அனுபவிக்கிறார்.

இந்தத் தீர்ப்பை, உயர் நீதிமன்று வழங்குவதற்கு முன்னரே அனுரா பண்டாரநாயக்க தமதுரையில் அதைக் கோடிட்டுக்காட்டியிருந்தார்.

எஸ்.பி.திஸநாயக்கவின் சிறைக்கு, அனுரா பண்டாரநாயக்க தமதுரையில் திகதி குறிப்பிட்டிருந்தார் எனக் கூறப்படுகிறது.

எனவே, நீதிமன்றத் தீர்ப்பை முன்கூட்டியே வெளியிட்டதன் மூலம் அனுரா பண்டாரநாயக்க உயர்நீதிமன்றை அவமதித்திருக்கிறார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் தற்சமயம் நாட்டில் இல்லை. அவர் நாடு திரும்பியதும் இதுதொடர்பில் மேற்கொள்ளவேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து கலந்தாலோசிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார் உயர்நீதிமன்றப் பதிவாளர். (எ-க)

# குண்டு வீச்சுக்கு ஐ.தே.கட்சி மீது குற்றம் சுமத்துவதற்குக் கண்டனம்

### பொலீஸ்மா அதிபருக்கு கரு ஜயசூரிய கடிதம்

கொழும்பு,டிசெ.15

கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் இந்தியக் கலைஞர்களின் களியாட்ட நிகழ்ச்சியில் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவத்துடன் ஐ.தே.கவைத் தொடர்புபடுத்துவதை ஐ.தே.கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது என அக்கட்சியின் உப தலைவரும், எம்.பியுமான கரு ஜயசூரிய பொலீஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பையடுத்து சற்றுநேர இடைவேளையில் தேசிய தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட செய்தியில் இந்தக் குண்டு வெடிப்புடன் ஐ.தே.கவுக்கு தொடர்பு உள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதுவொரு அப்பட்டமான பொய்ச்செய்தியாகும். இது பற்றி பொலீஸார் தீவிர விசாரணை மேற்கொள்ள வேண்டும். நாட்டு மக்களைத் தவறான முறையில் நடத்த முற்படுவதை அனுமதிக்க முடியாது.

இந்தக் குண்டுவெடிப்பை வன்மையாகக் கண்டிப்பதோடு, அது குறித்து பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என ஐ.தே.க. பொலீஸ்மா அதிபரைக் கோருகிறது.

அரசின் பிரசார ஊடகமாகச் செயற்படும் ரூபவாஹினி செய்தி தொடர்பாக உடனடி விசாரணையொன்றை மேற்கொள்ளவேண்டும், என அவர் மேலும் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (எ-க)




## வாலிப கிறிஸ்தவ சங்கம் - யாழ்ப்பாணம்
## வருடாந்த அங்கத்தவர் ஒன்றுகூடல் -2004

எமது நிறுவனத்தின் வருடாந்த அங்கத்தவர் ஒன்றுகூடல் எதிர்வரும் (20-12-2004) திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். Y.M.C.A. மண்டபத்தில் இடம்பெறும்.

சகல அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

109, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி-39617)(26-17-45)

பொதுச் செயலாளர்,
யாழ். Y.M.C.A.

## கண்ணீர் அஞ்சலி

**க.சொக்கலிங்கம் (சொக்கன்)**

இலக்கிய கலாநிதியும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி அமிர்தவேணி விமலனின் மாமனாருமாகிய அமரர் க.சொக்கலிங்கம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.*
(39677)(12-17-45)

### காணி உறுதிகள் வழங்கல்

தென்மராட்சிடிசெ.15.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாவற்காடு குடியேற்றத் திட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு அண்மையில் சொர்ண பூமித் திட்டத்தின் கீழ் காணி உறுதிகள வழங்கப்பட்டன.


பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற இந் நிகழ்வில் காணி உறுதிகளைப் பிரதேச செயலர் எஸ். சுப்பிரமணிய சர்மா குடியிருப்பாளர்களுக்கு வழங்கினார்.

(3-203-117)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

31 ஆம் நாள்
சபிண்டீகரண அழைப்பும், நன்றி நவிலலும்

11 ஆம் ஆண்டு
நினைவஞ்சலி



அமரர்
**குருசாமி செல்வநாயகம்**
(குஞ்சியப்பு)



அமரர்
**செல்வநாயகம் சசிகரன்**
(நியூ டடன்)

12.02.1946 அன்னை மடியில் 03.04.1975
16.11.2004 ஆண்டவன் அடியில் 22.11.1993

(புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்.)

*எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!*
*பொங்கும் துயர்தந்து போனீரோ - எமை விட்டு?*
*உங்கள் இழப்பால் துயருற்று வாடுகின்ற*
*உங்கள் பிள்ளைகளை ஒரு முறை பாருமப்பா!*
*எமக்காய் உழைத்து எமக்காய் வாழ்ந்து*
*எங்கள் மகிழ்விற்காய் என்றும் வாழ்ந்த அப்பாவே!*
*எங்கள் சகோதரனின் இழப்பில் துயருறும் வேளை*
*காலனவன் நோயினால் உங்களையும் கவர்ந்தானோ!*
*"உங்கள் பிரிவு தாங்கமுடியாது! - நாம்*
*விழிநீர் சொரிந்து தவிக்கின்றோம்."*
*ஓம் சாந்தி!*

இன்று (15.12.2004) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி: **செ.வசிகரன்**
கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**- குடும்பத்தினர்.**
(39676)


## YEAR END SPECIAL OFFER

COMPUTER LANGUAGE & ACCOUNTING

ஆண்டிறுதி சிறப்புச் சலுகை

**SELECT ANY COURSE PAY 3,900/- ONLY**

- Diploma in MS Office (MSO)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Computer Studies (DICS)
- Diploma in Web Design (DWD)
- Diploma in Computer Programming (DCP)
- Diploma in Computerised Accounting (DCA)



மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்

## ASIAN COMPUTER SYSTEMS

| | | | |
|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி.சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 077-3122198 | கணனி கல்லூரி கிளிநொச்சி. |


## 66 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
## திரு.மாணிக்கம் குணசிங்கம்

*(கமநல சேவை ஊழியர்)*




அவர்கள் தனது 66ஆவது பிறந்த தினத்தை இன்று (15.12.2004) புதன்கிழமை விநாயகரின் அருள் பாலித்து வடலியடைப்பிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அவரது அன்புக்குரிய மனைவி சாந்தகுமாரி, அருமை மகன் சாஜிசங்கர் (Swiss), மருமகள் மங்களேஸ்வரி, மகள் டாக்டர் தயாரூபி (Norway), மருமகன் சிறீதரன் பொறியியலாளா (Norway), மகள் ஜெயரூபி, மருமகன் இரவீந்திரன் (பிரதேச அலுவலக உத்தியோகத்தர், பளை), மகள் டாக்டர் தவராணி, மருமகன் டாக்டர் குலசிங்கம் (கொக்குவில்)

*பேரப்பிள்ளைகளாகிய* - வைஷ்ணவி, நிலாஷினி, கௌதம், சிருஷ்டிகாகேசி, நிரோஜன், நிஷா சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

அனைவரையும் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சங்கானை மேற்கு.*
*வடலியடைப்பு.*
*பண்டத்தரிப்பு.*
(39674)(12-17-45)

### ஆசிரியர்களுக்கு கணனிப் பயிற்சி

ஜப்பான் அரசின் ஆசிய நாடுகளுக்கான நட்புறவு உதவித் திட்டத்தின் கீழ், பாடசாலைகளில் இடைநிலைப்பிரிவில் உள்ள மாணவர்களின கணனிக்கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் ஆசிரியர்களுக்கு விசேடகணனிப் பயிற்சித் திட்டமொன்றை ஜப்பானிய அரசு அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஜனவரி மாதம் இலங்கையில் இருந்து 25 ஆசிரியர்கள் ஜப்பான் செலலவுள்ளனர். யாழ். மாவடடத்தில் இருந்து உரும்பிராய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

(3-203-72)

### சைக்கிள்கள் வழங்கப்பட்டன

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் வலுவிழந்தோர் மற்றும் ஆதரவற்றோர்களை கிராம ரீதியில் ஒருங்கிணைக்கும் உத்தியோகத்தாகளுக்கு, உத்தியோகபூர்வ பாவனைக்கென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் ஆறு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. (203-72)

## 31st Day Rememberances on 15th Dec.2004



Late. **Mrs. Mappanapillai Vethanayaki**

'You are now at home in Heaven,
All's so happy, all's so bright!'
But
We terribly miss you.

Karanavai Centre,
Karaveddy.
(36637)(26-17-45)

K.T.Sriskandasingham
& Family.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 22 - 03 - 1962



உதிர்வு 15 - 12 - 2001

அமரர்
**மாணிக்கம் பரமானந்தம் (பரா)**

*கண்களில் நீர் காயவில்லையின்னும்*
*கடந்தது கனவாக ஆண்டுகள் மூன்று*
*நினைவுகளில் தினமும் எம்முடன் வாழும்*
*உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம் – இந்நாளில் !*

43, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (39235)(17-45)

என்றும் உன் நினைவுடன்
அம்மா, சகோதர, சகோதரிகள்.

## மரண அறிவித்தல்

**பூதத்தம்பி சந்திரமௌலீசன்**



(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர் சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட *பூ.சந்திரமௌலீசன* அவர்கள் 11.12.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நிலாசினி(அமெரிக்கா), முரளீதரன் (அமெரிக்கா), தேவபாலன்(கனடா), ஜேபாலன் (இறுதியாண்டு-எந்திரவியல் மாணவன்-பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயன், கோகிலவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபினா, ஆரணி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை மாலை 4.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி நுணாவில்.*
*சாவகச்சேரி.*
(39671)(12-17-45)

*தகவல்:*
*ச.தேவபாலன் (மகன்)*
*தொ.பே.இல.0777 368471*

# கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 382 குடும்பங்கள் வெள்ளத்தால் இடம்பெயர்வு

பரந்தன்,டிசெ.15

வன்னிப் பகுதியில அண்மைய நாள்களாக பெய்துவரும் பெருமழையால் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 9 கிராமங்களைச் சேர்ந்த 382 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கண்டாவளையைச் சேர்ந்த 851 குடும்பங்களும் - தருமபுரம் மேற்கை சேர்ந்த 35 குடும்பங்களும் - புளியம்பொக்கணையைச் சேர்ந்த 28 குடும்பங்களும் - ஊரியான் பிரதேசத்தைச் சேர்ந்த 78 குடும்பங்களும், பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 25 குடும்பங்களும் - குமரபுரத்தைச் சேர்ந்த 160 குடும்பங்களும் - முரசுமோட்டையைச் சேர்ந்த 42 குடும்பங்களும் - பரந்தனைச் சேர்ந்த 150 குடும்பங்களும் - உமையாள்புரத்தைச் சேர்ந்த 148 குடும்பங்களும் வெளளப்பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இவர்களுள் 382 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வேறு இடங்களில் வசித்துவருகின்றனர்.

அக்கராயன் பகுதியிலிருந்தும் 15 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அக்கராயன் மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ளன.

வட்டக்கச்சிப் பகுதியிலிருந்தும் 55 இற்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்து இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் தங்கியுள்ளன. இவர்களுக்கான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் வழங்குகின்றது.

வட்டக்கச்சி - இராமநாதபுரம், வட்டக்கச்சி - கிளிநொச்சி ஆகியவற்றுக்கிடையேயான போக்குவரத்துகளும் வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

இப்பிரதேசத்தைச் சேர்ந்த 6ஆயிரத்து 225 ஏக்கர் நெற்பயிர் அழிந்துள்ளதாகவும், 10 ஏக்கர் பரப்பளவு வரையான உப உணவுப் பயிர்கள் அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

(8-352-204-381-405)

## விளக்கு தீப்பிடித்ததில் குழந்தைக்கு காயம்

ஒட்டுசுட்டான்,டிசெ.15

மண்ணெண்ணை விளக்குடன் விளையாடிய கைக்குழந்தையொன்று தீக்காயங்களுக்குள்ளான சம்பவம் கற்சிலைமடு மூன்றாம் கண்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த சி.கிருஷாந்தன் (வயது-2) என்ற குழந்தையே தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளது. (8-341-204)

## நாட்டுப்பற்றாளர் கௌரவம்

பூநகரி,டிசெ.15

இலுப்பைக் கடவையைச் சேர்ந்த சமாதான நீதிவானும், மாந்தை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான சோமசுந்தரம் பாலசிங்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் 'நாட்டுப்பற்றாளர்' என்ற கௌரவம் வழங்கியுள்ளனர்.

இவர் கடந்த 29ஆம் திகதி திடீர் சுகவீனமடைந்து மரணமானார். இவர் செய்த மக்கள் பணிக்காகவே விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தால் இக்கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. (8-291-204)

## புதிதாக காவலரண்களும் முள்வேலிகளும்

திருவையாறு.டிசெ.15

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகிலுள்ள காவலரண்கள், முள் வேலிகள் என்பன புதிதாக அமைக்கப்படுகின்றன.

யுத்தநிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் இராணுவத்தினரின் இச்செயற்பாடு குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-393-204)

# விவசாயச் செய்கைகள் வெள்ளத்தால் பாதிப்பு

தொடரும் கடும் மழையினால், நீர் நிரம்பி உடைப்பெடுத்த முத்துதையன்கட்டு பிரதான வாய்க்கால் மூலம் பெருக்கெடுத்துப்பாயும் நீரினால் கற்சிலைமடு, பெரியகுளம் வெளியிலுள்ள விவசாயச் செய்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதான வாய்க்காலை அடைத்துதவுமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அறிவித்தும், அவர்கள் இவ்விடயம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால், விவசாயம் பாதிப்படைந்துள்ளதுடன், வெள்ளம் தேங்கி நிற்பதால் விவசாயம் அழிந்த நிலங்களில் மீண்டும் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாதுள்ளது.

உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து உடைப்பினைச் சீர்செய்யுமாறும் தவறினால் விவசாயம் அழிவதைத் தடுக்க முடியாது எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-341-204)



பூநகரி-கிளிநொச்சி வீதியில் குஞ்சுப் பரந்தன் சந்தியின் பிரதான வீதியில் பாலம் ஒன்று நடுவிலே பிளவுபட்டு உடையும் நிலையில் உள்ளதைப் படத்தில் காணலாம்.

(படம்: பூநகரிச் செய்தியாளர்)

## கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் படுகாயம்

புதுக்குடியிருப்பு,டிசெ.15

கட்டுத்துவக்கு வெடித்ததில் பெண் ஒருவர் காயமடைந்த சம்பவம் முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சி.நமசிவாயம் (வயது 32) என்பவரே காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் காட்டிற்கு சென்ற சமயம் கட்டுத்துவக்குகட்டப்பட்டது தெரியாது தவறுதலாக வெடிவிபத்துக்குள்ளானார்.

இதேவேளை -

தமிழீழ காவல்துறையினர் கட்டுத்துவக்கு கட்டுவதற்கு தடைவிதித்துள்ளனர்.

இதையும் மீறி இச்செயலில் ஈடுபட்டவர்களை தமிழீழ காவல்துறையினர் தேடி வருகின்றனர். (353-204)

### கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## அடிப்படை வசதியின்றி இயங்கும் தபாலகம்

புதுக்குடியிருப்பு,டிசெ.15

புதுக்குடியிருப்பு உப தபாலகம் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி தனியார் வீட்டில் இயங்கிவருகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் அரச அலுவலகங்கள் யாவும் நிரந்தரமான கட்டடங்களில் இயங்கிவரும்போது வசதிகளற்ற வாடகை வீட்டில் இந்த உப தபாலகம் இயங்கிவருவதையிட்டு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (3-353-204)

## உணவகத்தில் சுகாதாரச் சீர்கேடு

புதுக்குடியிருப்பு, டிசெ.15

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் உள்ள உணவகத்தில் சுகாதாரம் பேணப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் உணவுச்சாலை அமைக்கபட்டுள்ளது. இச்சாலையின் சமையற்கூடத்தை யண்டி வெளிநோயாளர்கள் பாவிக்கும் மலசலகூடங்கள் அமைந்துள்ளன.

இதனால் இங்குள்ள நோய்க் கிருமிகளை காவிச் செல்லும் இலையான்கள் உணவுப் பொருள்களில் மொய்ப்பதினால், இவ் உணவுகளை உண்பவர்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

இந்நிலை தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் உரிய நடவடிக்கை எடுக்க வேணடுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-353-204)

# உதயன் பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

## 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்...

**12-01-1986**

அப்பாவி தமிழரை கொல்லாதீர்
எம். ஜீ. ஆர்.கருணாநிதி ஜே. ஆருக்குத் தந்தி

இடதுசாரி இயக்க அபிமானிகளுக்கு உத்தியோகம் இல்லையா?
ஜனநாயக உரிமைகள் இயக்கம் கண்டனம்

**13-01-1986**

யுத்த நிறுத்தம்: ஈழம் தே.வி.மு. விலகி விட்டது
ராஜீவுக்கு அறிவிக்கப்படும் அடுத்த நடவடிக்கை குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்

படையினர் போராளிகள் துப்பாக்கிச்சூடு!
பருத்தித்துறையில் ஐவருக்கு காயம்

**13-01-1986**

ராஜீவுடன் பேசுவதற்கு சிறிமா நிபந்தனை விதிப்பு
இலங்கை அரசுக்கு

1986 நடுப்பகுதியில் பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டுவாராம்
சொல்பவர் அமைச்சர் அல்விஸ்

**13-01-1986**

சந்தேக நபர்களாகக் கருதப்படாதவர்கள் 24 மணி நேரத்தில் விடுதலை
கிளிநொச்சி இணைப்பதிகாரி உறுதி

**13-01-1986**

சர்வதேச யுத்த நிறுத்த குழுவே உடன் தேவை
சென்னையில் அமிர் அறிக்கை

2-வது நாளாக பதற்றம்
பருத்தித்துறையில்

**14-01-1986**

முகாம்களுக்கு அயலில் வாழ்வோர் அகற்றப்படுவர்

4,69,000மலையகத் தமிழருக்கு இலங்கைக் குடியுரிமை
அடுத்த மாதம்சட்டமூலம் வருகிறது


**14-01-1986**

ஆலங்கேணியில் 20 பேர் சூடுபட்டு மரணம்
கடற்படைக் கமாண்டர் குண்டுவெடிக்குப் பலி

ஆயுதப்படையோடு போராளிகள் சமர்!
சிலிண்டர் குண்டு பேரிடியுடன் வெடித்ததைத் தொடர்ந்து இருதரப்பாரும் துப்பாக்கிச் சூடு

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 02 – 10 – 1930



உதிர்வு 15 – 11 – 2004

### அமரர் குலத்துரை குலராஜசேகரம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உரும்பிராய் இந்துக் கல்லூரி)

கடந்த (15.11.2004) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு உடனே வந்து ஆறுதல் கூறி அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்து துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (15.12.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சைவப் பாடசாலை ஒழுங்கை,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (39681)(42-19-45-43)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பையா அகிலாண்டநாயகி

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பையா அகிலாண்டநாயகி 10.12.2004 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நயினாதீவு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சல்லிபரவை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
(39691)(43-14-18)

தகவல்:
சுப்பையா சுதாகரன் (மகன்).

### கார்த்திகேசு குமரேசு



சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு குமரேசு நேற்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, தர்மலிங்கம், கமலாதேவி, கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி ஐயாத்துரை சவுந்தரம், திருமதி ஐயாத்துரை பூரணம் ஆகியோரின் சகோதரரும் காசிப்பிள்ளை, பத்மாவதி, மதி, அமரர் கனகசபாபதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2004) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பத்தகலட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*
(39689)(43-14-18)

தகவல்:
திருமதி அன்னபூரணம் (மனைவி).

### செல்லையா சுப்பிரமணியம்



கரணவாய் தெற்கு, முல்லையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் 13.12.2004 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சித்திரம் தம்பதியினரின் அன்பு மகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் கங்காசுதன் (லண்டன்), தர்சினி (ஜேர்மனி), கஜமுகசுதன், சுகந்தினி, சுபாசினி ஆகியோரின் அருமைத் தந்தையாரும் கணபதிப்பிள்ளை, வல்லிபுரம், நாகம்மா, மனோன்மணி, சிவபாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் பாலகிருஷ்ணனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் பர்ணிக்காவின் (ஜேர்மனி) அன்புப் பேரனுமாவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன் கிழமை பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புவரந்திட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"முல்லை"*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.* (39688)(43-14-18)

தகவல்:
சு.இந்திராணி (மனைவி).

## பாலர் கல்வி கலை விழா

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் 16 பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்திய 38 ஆவது ஆண்டுக் கலைவிழா கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாலர் கல்விக் கழகத்தின் தலைவர் வ.கிருஷ்ணபிள்ளை தலைமையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 16 பாடசாலைகளைச் சேர்ந்த சிறார்களில் கலை நிகழ்வுகளும் போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (3-203-190)

## கோண்டாவிலில் கசிப்பு வேட்டை: இருபெண்கள் கைது

கோண்டாவில் கிழக்கு சென்.செபஸ்ரியார் வீதிப் பகுதியில் கோப்பாய் பொலீஸார் நடத்திய கசிப்புத் தேடுதல் வேட்டையில் இருவர் கைதாகினர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறு இரவு இடம்பெற்றது. இதில் இதே இடத்தைச் சேர்ந்த தர்மராசா சாந்தினி, ஸ்ரீதரன் ஜெயகௌரி ஆகிய இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் இவர்கள் யாழ். நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்தமைக்காக ஸ்ரீதரன ஜெயகௌரிக்கு 2வருடம் 8மாதம் கடுழியச் சிறைத்தண்டனையும், தர்மராசா சாந்தினிக்கு 40 ஆயிரம் ரூபா குற்றப்பணமும், 20 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டது.

## 7000 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

தற்போது பெய்து வரும் தொடர் மழையினால் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் வாழும் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக நிதி உதவி, உலர் உணவு நிவாரணம் போன்றவற்றை வழங்கி உதவுமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சிடம் கோரியுள்ளோம்.

சிறு குடிசைகளில் வாழும் மக்களே வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பல குடும்பங்கள் தொழில்களை இழந்தும் நோய்த்தொற்றுக்கு உள்ளாகியும் காணப்படுகின்றனர் - என்று அவர் கூறினார். (3-203-152)

## நூல்களைப் பெறுமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்து

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தீவக வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் வலயப்பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளின் அதிபர்கள் இன்றும் நாளையும் பணிமனையில் இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (3-202)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் ப. மார்க்கண்டன்

(முன்னாள் உதவி அதிபர், யா/இமையாணன் அ.த.க.வி.)

இருபத்தொரு வருடங்கள் எமது வித்தியாலயத்தில் அரும்பணியாற்றி, அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து எல்லோர் மனதிலும் இடம்பிடித்த முன்னாள் உதவி அதிபர் ப.மார்க்கண்டன் அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

**இமையாணன்,**
**உடுப்பிட்டி.** (39689)(29-43-14-18)

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், ஊழியர், பா.அ.ச., ப.மா.ச., ப.மா.ந.வி.ச.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 25 – 02 – 1967



ஆண்டவன் அடியில் 16 – 11 – 2004

எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்காக பிரகாசத்துடன் வாழ்ந்து
16.11.2004 அன்று சிவபதமடைந்த
223, சில்வா வீதி, வட்டக்கச்சியைச் சேர்ந்த

### அமரர் செல்வரட்ணம் சுகிர்தன் (திவாகர்)

அவர்களின் 31ஆம்நாள் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (16.12.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கின்போது நேரில் வருகை தந்தும், மலர்வளையங்கள் கண்ணீர் அஞ்சலிகள் வழங்கியவர்களுக்கும், அஞ்சல்மூலமும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் எல்லா வகையிலும் உதவியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*223, சில்வா வீதி,*
*வட்டக்கச்சி.* (C/39629)(42-19-45-43)

**- குடும்பத்தினர்.**


Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6573256 முதல் 6586309 வரை
சீட்டிழுப்பு இல. 93 திகதி 13-12-2004

வெற்றி எண்கள் **7 5 2 7 2 4** சுப்பர் எண் **07**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,39,97,575/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,39,97,575/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 5,000/- | 5,45,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,122 | 500/- | 5,61,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,190 | 50/- | 5,59,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,10,899 | 10/- | 11,08,990/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 1,000/- | 1,09,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,127 | 100/- | 1,12,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,083 | 20/- | 2,21,660/- |
| மொத்தம் | 1,35,672 | | 64,75,450/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 64,75,450/-

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,43,08,750/-**

தொடர் இல. 7538316 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 16 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6576166-1-08
6578975-6-07
6576066-8-39
6575435-5-70
6573751-2-86
6573886-2-35
6583190-6-60
6580203-6-92

# அ'புரத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில்!

தற்போது பெய்துவரும் கடும்மழை காரணமாக அநுராதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மதவாச்சி, கெப்பிற்றிக் கொல்லாவ, ஹன்பிந்துனு வெவ, ஹொரவப்பொத்தானை போன்ற பிரதேச செயலகப் பிரிவுகள் வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளிலுள்ள சில குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இன்னும் சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## துயர் பகிர்தல்

வலி.கிழக்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை ஆலோசகரும் பிரதேச செயலக முத்தமிழ் விழாக்களில் சிறப்புரை ஆற்றியவரும் புகழ்பூத்த கல்விமானும் நாடறிந்த எழுத்தாளருமான

**அமரர் கலாநிதி க.சொக்கலிங்கம்**
**(சொக்கன் ஐயா)**

அவர்கள் அமரத்துவமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலி.கிழக்குப் பிரதேச செயலரும்
பிரதேச செயலக கலாசாரப் பேரவையினரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

குறிப்பு: அமரர் கலாநிதி க.சொக்கலிங்கம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று (15.12.2004) புதன்கிழமை கோப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (C/39643)

## ஐந்தாம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்

அன்னை மடியில் 30 - 10 - 1923



கண்ணன் கழலடியில் 11 - 12 - 1999

**அமரர் நா.தம்பிமுத்து**
(ஸ்தாபகர், ரவர்(Tower) கோப்பி அன் கூல்பார்)
திதி : கார்த்திகை சதுர்த்தி

*இலக்கிய - அரசியல் நண்பர்களால் "நண்பர்"*
*என அன்போடு அழைக்கப்பட்ட கெழுதகை*
*நட்பினராய் வையகம்*
*பயனுற வாழ்ந்து சிறந்த எம் தந்தைக்கு*
*ஈரநெஞ்சோடு இனிய அஞ்சலிகள்.*

*15,யாழ்பாடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (39685)(22)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### வேலன் செல்லையா



புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் செல்லையா நேற்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா - சின்னம்மாவின் அன்புக் கணவரும் மனோன்மணி, வேல்மழகன் (வலி.கிழக்கு ப.நோ.கூ.சங்க ஊழியர்), செல்வநேசன், சிவபாக்கியம், பஞ்சலிங்கம் (ஊழியர் - உயர் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), கமலாதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நாகேந்திரம், சண்முகலிங்கம் (இலங்கை மின்சாரசபை ஊழியர்), குணமலர் (முன்பள்ளி ஆசிரியை, புத்தூர்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புத்தூர் கிழக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.* (39698)(30-18-14-38)

தகவல்:
செ.பஞ்சலிங்கம் (மகன்).

### திருமதி கந்தையா இராசம்மா

'வான்' அணிஞ்சிலடி, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா இராசம்மா நேற்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் திருமதி இராசமணியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தர்மரத்தினம் மற்றும் திருமதி பவளம்மா, இராசையா, நாகராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.* (39694)(18-14-38)

தகவல்:
இ.நாகராசா
(சகோதரன்).

### சாம்பசிவம் ரகுலதரன் (வருவாய்த்துறை)

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வள்ளிபுனம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாம்பசிவம் ரகுலதரன் நேற்றுமுன்தினம் (13.12.2004) திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் சாம்பசிவம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சுதர்சினியின் (சாந்தி) அன்புக் கணவரும் அமரர் அருட்செல்வன், அமரர் அருள்மொழி, ராதிகா, தனவேந்தன், நளினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை வள்ளிபுனம், புதுக்குடியிருப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வள்ளிபுனம்,*
*புதுக்குடியிருப்பு.* (39692)(38-18-14)

தகவல்:
இ.சாம்பசிவம்
(தகப்பன்).


அதிரடி விலையில்
புதிய CDகள் குறைந்த விலையில் மொத்தமாக விற்பனைக்கு
21/=
T.P.: 021-2222352

அட்வான்ஸ்ட் அம்பீசஸ் அக்கடமி
ஓடக்கரை வீதி - சங்கானை
கல்வியாண்டு 2005
தரம் 01-G.C.E.(O/L) வரை
சகல புதிய பிரிவுகளும் ஆரம்பம்
இன்று (15.12.2004) புதன்கிழமை
காலை 9.00மணி (S.L.T) (39672)(12)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
அஜித் (இருவேடம்), பூஜா நடித்த
அட்டகாசம்

தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே.)
அடுத்த வெளியீடாக மிகவிரைவில் இந்தியாவிலும் இலங்கையிலும் அர்ஜுன், லைலா, வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா


ராஜா யாழ்ப்பாணம்
அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 16 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
சேரன், சிநேகா, கோபிகா, மல்லிகா நடித்த
ஆட்டோகிராப்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30மட்டும் (பு.நே.)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குறிஞ்சிப்பாட்டு (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
இன்று மட்டும் காலை 10.30, 2.30 (பு.நே.)
இளையதளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ்)
தினசரி இரவு: 6.30, 9.00 (பு.நே.)
ஆங்கிலப்படம் HULK அடுத்த வெளியீடு:
அழகிய தீயே

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், லாரா நடித்த
சித்ரப்தி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) SPIDER MAN-2


## மரண அறிவித்தல்

### நாராயணசாமி இராதாகிருஸ்ணன் (ராதா/ராசன்)



சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய நாராயணசாமி - இராதாகிருஸ்ணன் நேற்றுமுன்தினம் (13.12.2004) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அமரர் நாராயணசாமி- செல்வலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் சுதாஜினியின் (இந்தியா) அன்புக் கணவரும் சுஜீவனின் (இந்தியா) பாசமிகு தந்தையும் பாலகிருஸ்ணன் (குமார்), கோபாலகிருஸ்ணன் (கோபால், சங்கானை MPCS), அமரர் செல்வகிருஸ்ணன், ஆனந்தகிருஸ்ணன் (ஓமான்), சிவராமகிருஸ்ண்ன் (சிவா, சங்கானை MPCS), கௌரி (ஆசிரியை, நவாலி மகாவித்தியாலயம்), மனோகரி (யாழ். மின்னகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பரஞ்சினி (கனடா), சிறிதரன் (கனடா), மகிந்தன் (ஜேர்மனி), குவீந்திரன், சுமதி (கனடா), அமரர் கேதீஸ்வரன், தயாபரன், மனோரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுழிபுரத்தில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.குவீந்திரன் (மைத்துனன்)
நா.கோபாலகிருஸ்ணன் (சகோதரன்)

*சுழிபுரம் மத்தி,*
*சுழிபுரம்.* (39700)(38-18-14)

## மரண அறிவித்தல்கள்

### சாம்பசிவம் ரகுலதரன்

வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் இ.சாம்பசிவம் அவர்களின் அன்பு மகனும் திருமதி ரகுலதரன் சாந்தினியின் அன்புக் கணவருமாகிய சாம்பசிவம் ரகுலதரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (13.12.2004) திங்கட்கிழமை அகாலச் சாவைத் தழுவிக்கொண்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் இல்லத்தில் இன்று (15.12.2004) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, வள்ளிபுனம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செயலாளர்,
தேசிய எழுச்சிப் பேரவை
யாழ். மாவட்டம்.

(39641)(38-18-14)

### சின்னப்பொடியன் கோபால்
(இ.போ.ச.சாரதி, பருத்தித்துறை டிப்போ)



நாவலடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டி, தர்மகுலசிங்கம் வாசிகசாலையடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் கோபால் (இ.போ.ச.சாரதி, பருத்தித்துறை டிப்போ) அவர்கள் நேற்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புவனவதியின் அன்புக் கணவரும் சசிகரன், ஜெயமதி, பகீரதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தர்மகுலசிங்கம் வாசிகசாலையடி,*
*வல்வெட்டி, உடுப்பிட்டி.* (39696)(38-18-14)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நவரட்ணராசா நாகரத்தினம்மா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரட்ணராசா நாகரத்தினம்மா அவர்கள் நேற்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை நவரட்ணராசா (ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி அம்பலவாணர் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரையின் மருமகளும் கைலைவாசன் (U.K.), ஆனந்தவாசன் (பிரான்ஸ்), வதனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியதேவி (U.K.), ரட்ணதேவி (பிரான்ஸ்), சிவகணேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதூண், கஜன், நிலாஜி, சித்திரா, சந்திரு ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் சகோதரியும் லிங்கநாதபிள்ளை, கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பரம்சோதி, மகாலஷ்மி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை கல்கிசை மகிந்தமலர்ச்சாலையில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூத[illegible]கிஷ மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ந.கைலைவாசன்,*
*21, E.S.பெனாண்டோ மாவத்தை,*
*வெள்ளவத்தை. T.P.:0112 559563.*

தகவல்:
செ.லிங்கநாதபிள்ளை
ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். T.P.: 5342

(39701)(38-18-14)

### திருமதி புஸ்பதேவி திருநாவுக்கரசு

ஆனைக்கோட்டை, பொன்னையா ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி புஸ்பதேவி திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீஆனந்தராசா, ஸ்ரீதயானந்தராசா, ஆனந்தராணி, ஸ்ரீயோகானந்தராசா, ஸ்ரீசிவானந்தராசா, ஸ்ரீசெல்வானந்தராசா, யோகானந்தராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் மதிவதனி, ஜெகதீஸ்வரி, இராஜகுலேந்திரன், வசந்தி, திவ்யகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2004) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல்மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புஸ்ப வாசா,*
*பொன்னையா ஒழுங்கை,*
*ஆனைக்கோட்டை.* (39699)(38-18-14)

தகவல்:
மக்கள், மருமக்கள்.


கணனி நிறுவனத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான தாரண வருடம் கார்த்திகைத்திங்கள் 30 நாள் இன்று (15.12.2004) புதன்கிழமை மாலை 4.52 மணி முதல் 6.22 மணி வரையுள்ள சதுர்த்தியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

COMPUTER WORLD

என்னும் நிறுவனத்தை 7 ஆம் கட்டை, பிரதான வீதி, சங்கானையில் ஆரம்பிக்கவுள்ளோம். பிரதம விருந்தினர் திருமதி றெஜினா இருதயநாதன் (கல்விப் பணிப்பாளர்- வலிகாமம்), திரு.திருமதி நா.நாகேஸ்வரன் (முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழக கிளை). அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து நிறுவனத்தை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

Computer World இன் சேவைகள்: Computer Class, Self Practicals, Computer Games, Screen Printing, Internet calls, CD Writing, CD, VCD, Mp3 Sales, Colour photo copy.

7 ஆம் கட்டை, பிரதான வீதி,
சங்கானை. (39693)(38-18-14)

தங்கள் நல்வரவை நாடும்:
ரவீந்திரனும் சகோதரர்களும். (ரவி)

# பாதாள உலகக் குழுத் தலைவரும் சகாவும் நேற்றுச் சுட்டுக்கொலை!

## நீர்கொழும்பில் அதிகாலை சம்பவம்

பிரபல பாதாள உலகத் தலைவர் திவுல பிட்டிய தம்மிகவும், அவரது சகாவும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களைக் கைதுசெய்யச் சென்ற பொலீஸாரைத் தமது கைத்துப்பாக்கிகளால் அவர்கள் சுட எத்தனித்தபோதே பொலீஸார் முந்திக் கொண்டு அவர்கள் இருவரையும் சுட்டுக் கொன்றனர் எனக் கூறப்பட்டது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் நீர்கொழும்பு, பெரியமுல்ல, சென். அந்தனீஸ் வீதியில் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பு, திவுலபிட்டிய, கட்டுநாயக்க, ஜாஎல, சீதுவ போன்ற பகுதிகளில் இடம்பெற்ற பல கொலைகள், கொள்ளைகள், ஆள்கடத்தல்கள் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காகத் தேடப்பட்டு வந்த திவுலபிட்டிய தம்மிக, பொலீஸாரின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டுத் தப்பி வாழ்ந்து வந்தார். இவரைக் கைது செய்வதற்குப் பொலீஸார் பல தடவைகள் முயற்சித்தபோதும் அவர் பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டுத் தப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து பேலியகொடையில் இயங்கும் விசேட பொலீஸ் பிரிவொன்று இவரைக் கைதுசெய்ய நீர்கொழும்புக்குச் சென்றது. சந்தேகநபரும் அவரது சகாவும் மோட்டார் சைக்கிளொன்றில் குற்றச்செயலொன்றைப் புரிவதற்காகச் சென்றுகொண்டிருந்தபோது, பொலீஸார் அவர்களை வழிமறித்தனர். அச்சமயத்தில் தமது துப்பாக்கிகளால் பொலீஸாரைச் சுடுவதற்கு அவர்கள் முயற்சித்தனர் என்று கூறப்பட்டது.

இதற்கிடையில், உஷாரடைந்த பொலீஸார் முந்திக்கொண்டு அவர்களைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களிடமிருந்து 9 எம்.எம். மற்றும் 38 எம்.எம். ஆகிய இரண்டு ரகக் கைத்துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-க)

### கழுத்தில் காயத்துடன் பெண் ஆஸ்பத்திரியில்!

கல்வியங்காடு, 3ஆம் கட்டைப் பகுதியில் நேற்றிரவு 11 மணியளவில் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் உதவிகேட்டு நின்ற பெண் ஒருவரை வீதியால் வந்த ஓட்டோ சாரதி ஒருவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து சேர்த்தார்.

இச்சம்பவத்தில் கல்வியங்காடு ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் தவமலர் (வயது-28) என்பவரே படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டவராவார். இவருக்குக் கத்திவெட்டு ஏற்பட்டமைக்குரிய காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-12)

### வெள்ள நிவாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், யுனிசெவ், உலக உணவு நிறுவனம், ஒக்ஸ்பாம், போரூட், வேர்ள் விஷன், இசட் ஓ.ஏ.நிறுவனம் (ZOA) மற்றும் கிளிநொச்சி, முல்லை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்க ளின் இணையம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உட்பட வன்னியில் செயற்படும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு வெள்ள நிவாரணப் பணிகள் குறித்துக் கலந்தாலோசனை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

உடனடி மனிதாபிமானப் பணிகளை ஒருமுகப்படுத்திச் செயற்படுத்த விசேட செயலணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு இன்று மாலை மீண்டும் கூடி வெள்ள நிலைமையை மதிப்பிட்டு நிவாரணப் பணிகளைத் தொடக்கவுள்ளது. (ஐ)

### கூட்டுப் பயிற்சிக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைக்கப்பலான சயூரா, கரையோர ரோந்துக் கப்பலான ஜெயசாகர மற்றும் பீரங்கிக் கப்பல் ஒன்று, அதிவேகப்படகு இரண்டு ஆகியவற்றை இந்தப் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுத்தவுள்ளது. இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புச் செயற்பாட்டின் ஓர் அம்சமாகவே இந்தக் கடற்படையின் கூட்டுப்பயிற்சி நடவடிக்கை இடம்பெறவுள்ளது. (ஐ-க-12)

### தந்தையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரைகுறையாகப் புதைக்கப்பட்டதால் அது பற்றிய தகவல் தெரியவந்தது. விசுவமடு காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுத்தனர்.

குப்புசாமி - இராஜகோபால் (வயது-45) என்பவரே கொல்லப்பட்டிருக்கிறார்.

இவரது புதல்வரான கிருஷ்ணராஜா (வயது -18) என்பவரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

(ஐ-402-202)

### யாழ். மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களது சத்திரசிகிச்சை கற்றல் செயற்பாடுகளை (Surgery Appointments) உடனடியாக ஆரம்பிக்குமாறு பீடாதிபதி துணைவேந்தர் ஆகியோரைக் கேட்டுக்கொள்வதுடன், சத்திரசிகிச்சை கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் வரை மருத்துவ மாணவர்கள் அனைவரும் தங்களது சகல விதமான கல்விச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தத் தீர்மானித்துள் ளோம்.

இதற்குரிய தீர்வினை நிர்வாகம் உடனடியாகப் பெற்றுத்தரும் என எதிர்பார்க்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## வன்னிப் பிரதேசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதால் வன்னியின் பல பிரதேசங்களிலும் மக்கள் இடம்பெயரமுடியாமல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வன்னியில் உள்ள சகல குளங்களும் வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன. பாரிய குளமான அக்கராயன் 2அடியும் கல்மடுக்குளம் 2அடி 3 அங்குலமும் புதுமுறிப்புக்குளம் 3அடிவரையும் வான்பாய்ந்து கொண்டிருக்கின்றன.

முல்லைத்தீவில் பாரிய குளமான முத்தையன் கட்டுக்குளத்திற்குப் பாரியளவு நீர் வந்து கொண்டிருப்பதால் வான்பாய்கின்றது.

கண்டாவளை மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச மக்களும் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர். புதுக்குடியிருப்பில் 421 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

மக்கள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

பரந்தன் - முல்லைத்தீவுச் சாலையில் 7 ஆம் கட்டைக்கிடையில் புளியம்பொக்கணைச் சந்திக்கருகில் வீதிக்குக் குறுக்காக 3 அடி உயரத்திற்குத் தண்ணீர் பாய்வதால் போக்குரத்துத் தடைப்பட்டது. இதனையடுத்து விசுவமடு அரசியல்துறையினர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், கடற்றொழிலாளர் சங்க சமாசத்தினர், விடுதலைப் புலிகளின் நிதித்துறை கள அமைப்புப் பகுதியினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் உழவு இயந்திரம் மற்றும் வள்ளங்கள் மூலம் மக்களையும் பொருள்களையும் ஏற்றி, இறக்குவதுடன், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் ஆகியவற்றையும் ஏற்றி இறக்கும் பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலும் பெருமளவில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மன்னார்ப்பகுதியில் நேற்றுவரை 3 ஆயிரத்து 80 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. மன்னாரில் சில இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், மக்கள் இடம்பெயர முடியாதவாறு வெள்ளம் சூழ்ந்துள்ளது.

பாலியாறு, பறங்கியாறு, சிப்பியாறு, நாயாறு போன்ற ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதால், அதிக பாதிப்பு மாந்தை உதவி அரச அதிபர் பிரிவில் ஏற்பட்டுள்ளது. இன்றுவரை அங்கு 303 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

நானாட்டானில் 880 குடும்பங்களும் மன்னார் உதவி அரச அதிபர் பிரிவில் 1206 குடும்பங்களும் முசலியில் 168 குடும்பங்களும் இடம்பெயர்ந்திருப்பதாக மன்னார் அரசசெயலகம் தெரிவித்துள்ளது. இடம்பெயராத மக்களும் மழைவெள்ளப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் நேற்றுக்காலைவரை 24 மணிநேரத்தில் 43 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது. கடந்த 3நாள்களில் 152 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது. மட்டக்களப்பில் 48 மில்லி மீற்றர் மழையும் வவுனியாவில் 33.07 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளன.

நேற்று வெளியான வானிலை அறிக்கையின்படி வங்கக்கடலில் உருவான தாழமுக்கம் பலவீனமடைந்து வருவதாகவும் - அதனால் ஓரிரு நாள்களில் வானிலை தெளிவாகும் எனவும் - தெரிவிக்கப்படுகின்றது.

கடலில் காற்றின் வேகம் அதிகபட்சமாக 40 முதல் 50 கிலோ மீற்றர் வரையாக இருக்குமெனவும் கடல் கொந்தளிப்புடன் இருக்குமெனவும் வானிலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ஐ-12)

### கிளிநொச்சிவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து நேற்று முன்னிரவில் ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோர் கூடி ஆராய்ந்தனர்.

நின்றுபோயுள்ள சமாதானப் பேச்சுக்களை முன்நகர்த்தும் முயற்சியாக மீண்டும் இலங்கை வந்துள்ள சொல்ஹெய்மின் விஜயம் குறித்து இந்தச் சந்திப்பின்போது முக்கியமாக ஆராயப்பட்டது. மீண்டும் போர் மூண்டுவிடும் என்ற ஒரு கட்டத்தை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருப்பதாக விமர்சனங்கள் வந்திருக்கும் சமயத்தில் இந்த முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின் பின்னரே சொல்ஹெய்முக்கு கிளிநொச்சிவரை ஹெலி வசதியை வழங்குவதற்கு அரசு முடிவுசெய்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை-

பாதுகாப்புக் காரணங்களுக்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு விமானப் படையினரின் கலங்கள் பறப்புக்களை மேற்கொள்வதில்லை என்று பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்திருந்தபோதும், புலிகளிடம் இருந்து கோரிக்கை வந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க தெரிவித்தார். புலிகள் கேட்கும் பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சு அது பற்றித் தீவிர பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-12)

### மழையால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், சில பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு யாரும் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போயிருப்பின் அது குறித்து பரீட்சை ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவரின் அவர்களுக்குரிய பரீட்சையை வேறு ஒரு தினத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பரீட்சைத் திணைக்களத்திற்கும் அறிவிக்க முடியும்.

0112784201 அல்லது 0112 784 208 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பரீட்சைக்குத் தோற்ற முடியாது போனமை குறித்து சம்பந்தப்பட்டோர் அறிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க-12)

### புதுத் தகவல் ஏதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் புலிகள், சொல்ஹெய்முக்கு எடுத்துரைப்பர் எனத் தெரிகின்றது.

இன்று வன்னி விஜயத்தை முடித்துக் கொண்டு வவுனியா வழியாகக் கொழும்புக்குத் திரும்பும் சொல்ஹெய்ம், நாளை கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசவிருக்கின்றார்.

அதன்பின் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் சொல்ஹெய்ம், அடுத்த திங்கட்கிழமை (20 ஆம் திகதி) லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் மதியுரைஞர் அன்ரன். பாலசிங்கத்தைச் சந்திப்பார்.

வன்னியில் புலிகளின் தலைமையோடும், கொழும்பில் இலங்கை ஜனாதிபதியோடும் தாம் நடத்திய பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்தும் -

தொடர்ந்து எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் -

லண்டனில் பாலசிங்கத்தோடு சொல்ஹெய்ம் விரிவாக ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தச் சந்திப்பின் பின்னரே இலங்கை அமைதி முயற்சிகளில் ஏதேனும் முன்நகர்வு ஏற்படுவதற்கு வாய்ப்புக் கிட்டக்கூடும் என விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அமைதி முயற்சிகள் தொடர்ந்து தேக்கமடைந்திருந்தாலும் பண்டிகைக்காலம் நெருங்கும் தற்போதைய சூழலில் களநிலைமையில் பெரிய மாற்றங்கள் ஏதும் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றும் -

எதுவானாலும் தைப்பொங்கல் பண்டிகைக்குப் பின்னரே நிலைமை மாற்றங்கள் இடம் பெறலாம் என்றும் -

புலிகளுடன் தொடர்புடைய அந்த வட்டாரங்கள் மேலும் கருத்துத் தெரிவித்தன.

தமிழர் தாயகத்தில் இப்போது மழை வெள்ளச் சூழ்நிலை. இத்தகைய நிலையில் மக்களுக்குத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய திடீர் முடிவுகள் எடுக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-க)


விண்ணப்பித்து விட்டீர்களா ?

IIS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2005

விண்ணப்ப முடிவுதிகதி - 15.12.2004

டிசம்பரில் O/L பரீட்சையும்

ஏப்ரலில் A/L பரீட்சையும்

எடுக்கவிருக்கும் மாணவர்களே!

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு, IIS இன் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டியாக அமைவதற்கு இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

"உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி IIS"

INSTITUTE OF INFORMATICS STUDIES

100, Clock Tower Road, Jaffna.

IIS IIS IIS IIS



G.A.Q. 2006

பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- ★ பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் மேற்குறிப்பிட்ட பாடநெறிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்தினூடாகச் செய்துகொள்ளலாம்.
- ★ விண்ணப்ப முடிவு திகதி: 31.12.2004.
- ★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
- ★ விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு: S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி - யாழ்.

குறிப்பு: யாழ். பல்கலைக்கழகத்திற்குரிய G.A.Q., 1st inCom விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன. (39695)







இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.